# மாணவர் விடியல்

மலர் : 37 ஆடி - ஆவணி 2009

இயேசு சபை அகதிப்பணி, 31, கிளிபர்ட் பிளேஸ், கொழும்பு – 04. தொலைபேசி : 011 2504384



# சித்திரமும் கைப்பழக்கம்


சு. வினோஜன்


ஏ. டிலினியா குரூஸ்
தலைமன்னார் கிராமம்


வே. சாந்தினி
குச்சவெளி


ர. அபிலாசன்
பெரியகமம்


ஆர். கிருஸ்ணலதா
செல்வா நகர்


பீ. ஜென்ரிக்கா
சாவற்கட்டு
மன்னார்



பீ. பௌஸ்கரன்
பன்குடாவெளி


எஸ். சியானா
பெரியகமம்


எம். பிரதீப்
மன்னார்


என். யஸ்மின்
சரோன் பெரேரா


ஜே. யோபிலா
மன்னார்


என். நிதுசன்
சொறிக்கல்முனை


பீ. டனிஸ்ரா
தோட்டவெளி


பீ. அனிஸ்ரன்
சாவகச்சேரி


எ. அன்ரனிதாஸ்
பள்ளிமுனை



கே. கீர்த்திகா
மட்டகளப்பு


த. வினித்திரா
மூதூர்


ஜெ. சஜீவன்
பன்குடாவெளி


எஸ். றூபி
சாந்திபுரம்


சு. சுதர்சன்
செல்வாநகர்


ஜே. லூயஸ் ஜோய்
பிகிறாடோ
மன்னார்


கே. லோஜினி
சொறிக்கல்முனை


வே. டிஷான்
திருகோணமலை


கே. கௌதம்
மன்னார்


மஞ்சுளா
செல்வாநகர்


ரா. ரம்மியா
குச்சவெளி

***அன்புப் பிள்ளைகளே!***
***இயேசு சபை அகதிப் பணியினரின் அன்பும் இறை ஆசியும்!***

தவறுவது மனித இயல்பு. அதை மன்னிப்பது தெய்வ பண்பு. மனிதர்களிடம் உள்ள நற்பண்புகளில் மன்னிக்கும் பண்பு மிக முக்கியமானதொன்று.

மன்னிக்கும் மனோபாவமே இறைவன் எமக்களித்த அருங்கொடை. மனிதன் தெய்வமாகப் பரிணமிக்க மனம் பண்பட வேண்டும். அதற்கு இடையறாத முயற்சியும் பயிற்சியும் அவசியம்.

செல்வம் இருந்துவிட்டால் மகிழ்ச்சி வந்துவிடும் என்று சிலர் தவறாக நினைக்கின்றார்கள். எவ்வளவுதான் செல்வம் இருந்தாலும் பொறாமை, வெறுப்பு, பகை போன்ற குணங்களுக்கு இடம் கொடுத்துவிட்டால் மனதின் மகிழ்ச்சியை அது அழித்துவிடும். மனதை எந்த அளவிற்கு தூய்மையாக வைத்திருக்கிறோமோ அந்த அளவுக்குத்தான் மகிழ்ச்சியும் இருக்கும்.

மற்றவர் உங்களுக்கு தீமை அல்லது கெடுதல் செய்கின்ற போது, ஆத்திரம், கோபம் போன்ற உணர்வுகள் உங்களுள் ஏற்படத்தான் செய்யும். அது மனித இயல்பு. அப்படிச் செய்கின்றவர்களை வெறுத்து ஒதுக்காது அவர்களை மன்னித்துவிடுகின்றபோது அவர்கள் செய்த தீமையின் பாதிப்புக்கு நீங்கள் ஆளாவதில்லை. அதனால் உங்கள் மகிழ்ச்சியும் பாதிக்கப்படாததாகின்றது.

மன்னிக்கும் போது வெறுப்பு, கோபம், போன்ற தீய குணங்கள் நம்மைவிட்டு நீங்கிவிடுகின்றது. மகிழ்ச்சியாக இருப்பதும், மகிழ்ச்சியில்லாமல் இருப்பதும் நம்மைப் பொறுத்த விடயங்களே. ஆகவே மகிழ்ச்சியான சூழலை நாமே ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

கோபமே மனித வாழ்க்கையைச் சீரழிக்கும். உறவுகளைச் சிதைக்கும். அமைதியைக் குலைக்கும். ஏன் மனித ஆயுளையும் குறைக்கும்.

ஏதாவது குற்றம் செய்திருந்தால் அதையே நீங்கள் நினைத்துக் கவலைப்பட்டுக்கொண்டிருக்காதீர்கள். குற்றமென உணர்ந்து அதையே மீண்டும் செய்யாமல் இருந்தால் அதுவே போதுமானது. கடந்து போனதைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருப்பதில் பயனில்லை. அது உங்கள் மன அமைதியைக் கெடுத்து, உங்கள் மகிழ்ச்சியையே பாதிக்கும்.

நாம் செய்த தவறுகளை மூடி மறைக்க முயன்றால் அது எங்களை இன்னும் பல தவறுகளைச் செய்யத் தூண்டுகிறது. தவறுகளால் நிரம்பிய எங்கள் மனம் குப்பைத் தொட்டி போலாகிவிடுகின்றது. மனம் கெடுவதும், தூய்மையடைவதும் நம்மைப் பொறுத்துத்தான் அமைகின்றன.

தவறுகள் செய்தால் அதை ஏற்றுக் கொள்ளுங்கள். அதை மூடி மறைக்க முயற்சிக்காதீர்கள். தவறுகளை உணர்ந்து, மனம் திறந்து ஏற்றுக் கொண்டு மன்னிப்புப் பெறுகின்ற போது அதன் பாதிப்புக்களில் இருந்து விடுபடுகின்றீர்கள்.

பாடசாலையிலோ, வீட்டிலோ உங்களுக்கு யாரும் தீமை செய்திருந்தால் அவர்களை உடன் மன்னியுங்கள். அவர்கள் செய்ததை அவ்விடத்திலேயே மறந்து விடுங்கள். அவர்களை மேலும் அன்பு செய்யுங்கள். அப்படி நீங்கள் செய்வதால் அத்தவறை அவர்கள் மீண்டும் செய்யமாட்டார்கள்.

நீங்களும் உங்கள் நண்பர்களுக்கோ, சகோதரர்களுக்கோ தீங்கு செய்திருந்தால் அவற்றை உணர்ந்து, மனம் வருந்தி மன்னிப்புக் கேளுங்கள். மீண்டும் அப்பிழைகளை செய்யாமலிருக்க உங்களைத் தயார்படுத்திக் கொள்ளுங்கள். உண்மையான மனமாற்றமே மன்னிப்பைப் பெற்றுத்தரும்.

மற்றவர்களை மன்னிக்கின்றபோது அது அவர்களுக்குச் செய்கின்ற நன்மை என்று எண்ணாதீர்கள். அது உங்களுக்கு நீங்களே செய்து கொள்கின்ற நன்மையாகும்.

மன்னிக்கும் மனம் இருந்ததால் தான் புத்தரும், இயேசுவும், நபிகளும், காந்தியும் மனிதர்களில் புனிதர்களாகப் போற்றப்படுகின்றனர்.

மனிதர்களுக்கு மட்டுமல்ல இயற்கைக்கு எதிராகவும் பாவம் செய்கிறோம். அவை எங்களை மன்னிப்பது இல்லையா? சிந்தித்துப் பாருங்கள். இயற்கைக்கு தீமை செய்தோமானால் எவ்வாறான பாதிப்புக்கள் ஏற்படும் என்பது நாம் நன்கு அறிந்த விடயம். அதன் விளைவு எங்களையே மீண்டும் பாதிக்கும். எனவே இயற்கையையும் நேசித்து, அதை நாம் பாதுகாக்க வேண்டும்.

எனவே அன்புப் பிள்ளைகளே! சிறுவர்களாகிய நீங்களே சமாதானத்தின் துளிர்கள். எமது நாட்டை அமைதிப் பாதையில் இட்டுச் செல்லவேண்டுமெனின் நீங்கள் ஒவ்வொருவரும் உறவுப் பாலங்களை அமைத்துக் கொள்ள வேண்டும். எனவே இன்றிருந்தே நீங்கள் ஒருவரை ஒருவர் மன்னித்து செய்த பிழைகளை மறந்து, அன்பை வளர்த்து, நற் பண்புகளைப் பேணி நல்லறம் புரிந்திட என் வாழ்த்துக்கள்!

மாணவர் விடியலுக்கான 38வது தலைப்பு **"அகதிகள்."** இது குறித்த உங்கள் ஆக்கங்களை ஆவணி 5ந் திகதிக்கு முன்னதாக எமக்கு அனுப்பி வையுங்கள்.

அன்புடன்
**Fr. கமல் அன்றாடி.**

# பாவ மன்னிப்பு வேண்டு!

பகுத்தறிவாளனே!
பண்பாட்டில் உயர்ந்தவனே!
பாரினையே புதுமையாய்ச் செதுக்க வந்த
பூமாதேவியின் புத்திரனே!
ஓ... மனிதனே!
உன் பயணப் பாதையிலே
பாவங்கள் பல்லாயிரம்
மலிந்து குவிந்து கிடப்பதாகவே
பார்வைக்கென்றும் தோன்றுதிங்கே!
தூர தரிசன நோக்கோடு
தூக்கி அடிவைத்த நீயோ
தொட்டதெல்லாமே இன்று
தான்தோன்றித் தனங்களாச்சே!
உன் பஞ்சதந்திரியங்கள் ஐந்தும்
பாவம் செய்யவென்றே
படைக்கப்பட்டதல்ல!
நீ பிறந்ததும் பாவம் செய்யவல்ல!
பாவத்திலிருந்து விடுதலை பெறு!
ஆண்டவன் சந்நிதியில்,
மண்டியிட்டு மன்றாடி,
உன் சிரம் தாழ்த்தி,
வேண்டுதல் செய்!
உனைப் படைத்த இறைவனிடம்,
பாவமன்னிப்பு வேண்டு!
பகுத்தறிவாளன் என்பதையும்,
பண்பாட்டில் உயர்ந்தவன் என்பதையும்,
இனியுன் நடத்தையில் காட்டு!
அப்போதுதான், நீயொரு
உண்மையான மனிதனாவாய்!



**ந.நூர்மதி,** சோமநாதர் வீதி,
பாண்டியிருப்பு.

# திரும்பி வந்தேன்!

திரும்பி வந்தேனே தந்தையே!
திருந்தி வாழும் பிள்ளையாக!
மனமுவந்து மன்னித்து - எனை
ஏற்றருளும் உம் பிள்ளையாக!

மனம் வருந்தி வந்தேனே - நான்
மகிழ்வுடன் அரவணைத்தீரே!
மனம் செய்த பாவமெல்லாம் - உடன்
மன்னித்து மறந்தீரே!

இனி நான் பாவம் செய்யாமல்
இன்பமாய் வாழ்ந்திடுவேன்!
இதுவரை எனக்கு தீங்கு செய்தவரையும்
இன்றே மன்னித்து மறந்திடுவேன்!



**Y.நிலோஜன்,** சொறிக்கல்முனை.

# மனதில் மலரவேண்டும் மன்னிக்கும் பண்பு!

மண்ணில் தோன்றிய மானிடனே!
மற்றவரோடு ஏன் நீ பகைத்துக் கொள்கிறாய்!
மகிழ்வுடன் வாழ நீ விரும்பவில்லையா?
மன்னிக்கும் பண்பை மனதில் விதைத்திடு!
ஒருமித்து வாழப் பழகிடு!
பகைவரை நேசித்திடு!
பணிவுடன் நடந்திடு!
குற்றம் செய்தாலும் - நீ
குறைகள் செய்தாலும்,
அதை நினைத்து வருந்திடு!
அதற்கான மன்னிப்பைப் பெற்றிடு!
பிறர் உன்னை பகைத்தாலும்,
அன்புடன் அவர் குறை மன்னித்திடு!
அக்கணமே அவர் பிழையும் மறந்திடு!
படைப்பனைத்தையும் காத்திடு - நீ
பாரில் சிறந்தே விளங்கிடு!



**தி.றிஸ்வியா,** சுந்தரபுரம், வவுனியா.

# மன்னிக்கும் மனமிருந்தால்...

மன்னிப்பு என்னும் பூ
சிறுவர் எம் மனதிலே பூத்திடணும்!
அனைவரும் விரும்பும் வண்ணம்
நறு மணம் வீசிடணும்!

பாலகப் பருவம் முதல்
பள்ளிப் பருவத்திலும் - ஏன்
பட்டங்கள் பெறும் வரையும்
மன்னிக்கும் மனம் வேண்டும்!



சிறுவயதிலே மன்னித்தால்
நண்பர் எம்மைச் சூழ்ந்திடுவர்
மனதிலே சஞ்சலம் இன்றி - நாளும்
மகிழ்வுடனே வாழ்ந்திடலாம்!

**R.சுபல்ரிகா,** தம்பனைக்குளம்.

# குதூகலம் பிறக்கட்டும்!

மன்னிப்பு என்னும் மகத்தான பண்பு
மாந்தரின் மனங்களில்,
குடியமர்ந்துவிட்டால் - எம்
குழப்பங்கள் தீர்ந்து - வாழ்வில்
குதூகலம் பிறக்கும்!
குணமுள்ள மக்களாய்த் - தலை
குனியாது வாழ்ந்திடலாம்!

**சு.சஞ்சுகா,** தரம் - 7, சுந்தரபுரம்.



உலகிலேயே கொசுக்கள் இல்லாத நாடு - பிரான்ஸ்.

## வாழ்வில் நன்மை பெற!

மனித உணர்வுகளில்
மறைந்து விளங்கி – இன்று
மனிதம் வாழ்ந்திட – பாரில்
மலர்ந்ததே மன்னிப்பு!

அன்பு என்னும் இலக்கணத்தின்
ஆணிவேராய் இருப்பது
மனித நேயத்தை என்றும்
மலர வைக்கிறது!



சொந்தம் என்றும் வாழ்வில்
தொலைந்து விடாமல்
சோதரராய் எமை சேர்த்து வைப்பது
மன்னிப்பு எனும் மகுடமே!

மன்னிப்பதால் முழுமை அடைகிறோம்!
மறப்பதால் நிறைவு பெறுகிறோம்!
சிந்தித்தால் சிறப்பைப் பெறுகிறோம்!
செயற்படுத்தினால் நன்மையடைகிறோம்!

**இ. சுபேஸ்கரன்,** தரம் - 5.

## உன்னையே கேட்டுப் பார்!

பரந்து விரிந்த உலகில் வாழும்
படைப்புக்களுக்கெல்லாம்,
உரிமையுடையவன் யார்?
மாண்பு மிகு மனிதனே!

என்னை இறைவன் ஏன் படைத்தார்?
அவர் பிள்ளையாக நான் வாழ்கின்றேனா?
நற்பண்புகளை என்னுள் வளர்க்கின்றேனா?
பிறரை அன்பு செய்கின்றேனா?
பிறரை மன்னித்து வாழ்கின்றேனா?
இதுவரை நான் செய்த நன்மைகள் எவை?

சிந்திப்பேன்!
சிந்தித்து விடை கண்டு
என் வாழ்வில் நன்மை பல
செய்ய விரும்புகிறேன்!

**சு. தர்சிகா,** சுந்தரபுரம், வவுனியா.

## மன்னித்து மறந்திடு!

பள்ளி செல்ல விரும்பு!
பாடம் வெல்லக் கரும்பு!
படித்து விட்டுத் திரும்பு!
பண்ண வேண்டாம் குறும்பு!



அரும்பு போல சிரிப்பாய்!
எறும்பு போல இருப்பாய்!
பிறரை அன்பாய் மதிப்பாய்!
பிழையை என்றும் பொறுப்பாய்!

**து. ரேணுகா,** கரடியனாறு.

## மகத்தான மறவாத பண்பு!

மனிதரிடம் உள்ள சிறப்பு
அதுவே மன்னிக்கும் இயல்பு!
பெரும்பகை எதுவாயினும் – அதை
உடைத்திடும் பண்பே மன்னிப்பு!
சிறியவர் பெரியவர் அனைவரும்
பின்பற்றும் பண்பே மன்னிப்பு!
தவறுகள் பல புரிந்தாலும் – அதை
தகர்த்திடும் பண்பே மன்னிப்பு!
ஒருமுறை நீ மன்னித்துப் பார்!
அதுவே புதியதோர் சமுதாயத்தை
உருவாக்கிடும் விரைவில்!



**Y.கோசிகன்,** தரம் - 4

## தூய்மையான பேரின்பம் மன்னிப்பு!

மன்னிப்பே மனிதனின் பெருந்தன்மை
மனதிலே அதனை நிறுத்திடுவோம்!
மானிடப் பண்பை வளர்த்திடுவோம்!
வளர்ந்திடும் பகையை மறந்திடுவோம்!

மன்னிப்பதும் மறப்பதும் பெருங்குணமே!
மனிதருள் இருந்திட்டால் மாணிக்கமே!
தன்னல செருக்கதை நீக்கிடுமே!
தரணியில் உயர் வாழ்வைக் கொடுத்திடுமே!

மாறாத அன்பதை வளர்த்திடுமே!
பிறர் நலன் பேணிடவும் செய்திடுமே!
தீராத பகையையே தீர்த்திடுமே!
திருந்திய உள்ளத்தையும் தந்திடுமே!



மனதாலும் ஒருபோதும் தவறாது ~ பிறர்
பிழைகளை மன்னித்து மறந்திடுவோம்!
மன்னிப்பின் மகிமையை உணர்ந்திங்கே,
உலகிலே சிறந்து விளங்கிடுவோம்!

**P.தேவநேசன்,** கல்லடிடச்பார்.

## மன்னிக்கப் பழகிடு!

வறுமை நீங்கி வசந்தம் வீச
வாழ்வில் மன்னிக்கப் பழகிடு!
வாழவிரும்பும் மனிதா — உந்தன்
பாவங்களை விலக்க
மன்னிப்புக் கேட்டுவிடு!
ஒவ்வொரு பொழுதும்
இனிதாய் மலர — உன்
வாழ்வில் மன்னிக்கப் பழகிடு!



**S.வனஜன்,** தரம் - 4.



உலகிலேயே மிக உயரமான கோபுரம் உள்ள நாடு - **நியூசிலாந்து.**

மன்னிப்பு என்ற பண்பு,
மாந்தர் மனதில் வளர்ந்திடட்டும்!
மன்னிக்கும் மனமிருந்தால்
மானிலமே போற்றி நிற்கும்!

உன் தவறை உணர்ந்திடு - நீ
பிறர் தவறையும் மன்னித்திடு!
உறவுகள் உன்னை வாழ்த்திட
உண்மையாய் மன்னித்து வாழ்ந்திடு!

மன்னிப்பை ஆடையாய் அணிந்திடு!
அதுவே உன் அணிகலனாகட்டும்!
இதையே நீ ஒழுகி வாழ்ந்தால்,
வாழ்வில் உனக்கு கவலை இல்லை!

நண்பர் என்றும் சூழ்ந்திருப்பர்!
பகைமை மறந்து சேர்ந்திருப்பர்!
உறவும் உன்னை வாழ்த்தி நிற்பர்!
ஊரும் உன்னைப் புகழ்ந்திடுவர்!

இன்றே இதை நீ உணர்ந்து,
இனிய சமூகம் ஒன்றை உருவாக்கிடு!
உன்னைத் தொடரும் இளையோரும்,
உலகில் உயர்ந்திட வழிவகுத்திடு!

## மன்னித்து வாழ்!



**வி. கவிதா,** சொறிக்கல்முனை.

# வாழ்வில் சிறந்திட...

- மனிதராகப் பிறந்தவர் தவறு செய்வது இயல்பு. அத்தவறை உணர்ந்து மனம் வருந்தல் நல்ல பண்பு.
- உன் தவறைப் பாராமல், மற்றவர் தவறை சுட்டிக்காட்டாதே!
- நீ பிறரை மன்னித்தால் தான் அவரும் உன்னை மன்னிப்பர்.
- தவறு செய்த பின்னர் மனம் வருந்துவதை விட அதைச் செய்யுமுன் அதைப்பற்றிச் சிந்திப்பது நல்லது.
- உன்னத எண்ணங்களை சிந்தனை செய்து, வாழ்வில் உயரப் பழகு!
- பிறரை நேசிக்கவும், மதிக்கவும், மன்னிக்கவும் பழகு. இறைவன் உன்னை மிகுதியாக ஆசீர்வதிப்பார்.

**ஜீ. கிருத்திகா,** தரம் - 6,
கொக்குவில் நலன்புரி நிலையம்,
மட்டக்களப்பு.

# மன்னிப்பு!

மன்னிப்பு என்பது மனித வாழ்க்கைக்கு மிக முக்கியமானதொன்றாகும். மனிதன் உயிர் வாழ்வதற்கு காற்று எவ்வளவு முக்கியமானதோ, அதுபோலவே எம் உறவுகள் நிலைப்பதற்கும் மன்னிப்பு அவசியமாகும். இன்றைய காலகட்டத்தில் மனிதர்களிடையே உறவுகளைவிட பிளவுகளே அதிகம் காணப்படுகின்றன. உடைந்த உறவுகளே உலகில் அதிகம் காணப்படுகின்றன.

அடுத்தவர் மூலம் ஒருவரது வாழ்வில் ஏற்படும் கசப்பான அனுபவம் அவரது மனதை மிகவும் காயப்படுத்துகின்றது. அதுவே தினம் தினம் அதிகரித்து தீராத பகையாக மாறுகின்றது. இதற்கான காரணம் மன்னிக்கும் மனம் இல்லாமையே! இவ்வாறான சந்தர்ப்பங்களில் மன்னித்து வாழ்ந்தால் பகைமை என்னும் இருள் அகன்று அன்பு என்னும் அருள்ஒளி தோன்றும்.

மனிதர்களிடம் உள்ள நற்பண்புகளே அவர்களை மிருகங்களிடம் இருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றது. அதில் மிக முக்கியமான பண்பு மன்னித்தல். ஒருவர் எமக்குத் தீமை செய்தால், அவரை வெறுத்து ஒதுக்காது அவரை மன்னித்து ஏற்றுக் கொண்டு அவரை அன்பு செய்ய வேண்டும். அத்துடன் அவர் செய்த தீமையை அவ்விடத்திலேயே மறந்துவிட வேண்டும்.

நாம் வாழும் வாழ்வோ மிகக் குறுகியது. அதில் எத்தனையோ தவறுகள் புரிகின்றோம். அவைகளை மன்னித்து எம்மைத் திருந்தி வாழ அழைக்கிறார் எம் இறைவன். அதுபோல நாம் செய்கின்ற தவறுகளுக்காக மனம் வருந்தி மன்னிப்புப் பெற்று, நாமும் ஒருவரை ஒருவர் மன்னித்து மரணத்தில் கூட பகைவர்களாக மடியாதிருக்க முயற்சி செய்வோம்.

மன்னிப்போம் மறப்போம்!
அன்பை நாம் வளர்ப்போம்!

**K. சோனியா,** JRS ஆசிரியர்,
பள்ளிமுனை.

**எதிலும் உங்களுக்கு சந்தேகம் இருந்தால்,
அதை எவ்வாறேனும்
நிவர்த்திசெய்து உண்மையை அறிந்து,
மனம் தெளிய வேண்டும்.
இல்லாவிடின் சந்தேக மனதுடன் இருந்தால்,
மனம் குழம்பி வேதனையில் தான் மூழ்க வேண்டும்.**



அவுஸ்திரேலியாவில் உள்ள நீளமான ஆறு - முர்ரே

# புதுயுகம் தோன்றிடும்!

உணர்வு என்னும் சிந்தையுள்
உயர்வாய்ப் பிறந்ததே மன்னிப்பு!
பொறுமை என்னும் புதையலில்
பொக்கிஷமானது மன்னிப்பு!



புதிதாய்ப் பிறந்த குழந்தைபோல்,
புனிதமாய் என்றும் வாழ்ந்திட்டால்,
புவிதனில் அமைதி நிலவி,
புதுயுகமே தோன்றிடும்!

**தி.தனுஷாயினி,** சுந்தரபுரம், வவுனியா.

# பிறர் பிழை பொறுப்போம்!



பாவத்தின் வயலில்
வாழ்ந்த மனிதர்கள் நாம்!
பரமனின் அன்பினால்
மன்னிப்புப் பெற்றோம்!

ஆதிப் பெற்றோரின்
முதல் பாவத்தினால்
அவலக் குழந்தைகளானோம்!
ஆண்டவன் அன்பினால் விடுதலையானோம்!

இறைதரும் நற் கனிகளை உண்டே,
அழிவில்லா வாழ்வை அடைந்திடுவோம்!
எம்பிழை உணர்ந்து மனம் நொந்து,
பிறர்பிழை யாம் பொறுத்திடுவோம்!

**மு.தனுசன்**

# சிந்தியுங்கள்!

- அன்பு நிறைந்த இன்சொல் இரும்புக் கதவைக் கூடத் திறக்கும்.
- நம்பிக்கை இல்லாத இடத்தில் முயற்சியும் இருக்காது.
- மனம் மகிழ்ந்தால் முகமும் மலர்ந்திருக்கும்.
- உங்கள் வாழ்வை மற்றவரோடு ஒப்பிட்டுப் பார்க்காதீர்கள்.
- நல்லது செய்து நடுவழியே போனாலும், பொல்லாதது தன் வழி செல்லும்.

**பீ.வினோஜினி,** பள்ளிமுனை.

**சிறந்தவை எல்லாம் நல்லவை**
**என்று கூறிவிட முடியாது.**
**ஆனால் நல்லவை எல்லாம் சிறந்தவையே!**

# மன்னிப்பு வழங்கு!

மன்னித்தல் மனித குணம்,
மன்னியாது விடுதல் மிருக குணம்.
மனிதா நீ இதை உணரு....
கண்களைத் திறந்து பார்!
மன்னியாத உனது மனத்தால்
மிருக குணங்களே மேதினியில்
மலிந்து கிடக்குதிங்கே!
கள்ளங்கபடம் இல்லாமல்,
அனைத்து ஜீவன்கள் மீதும்
கருணை காட்டு!
காருண்யம் நீ பேணின்
கடவுளுக்கு அடுத்தவன் நீதான்!
நான் கூறியதில்
தப்பேதும், தவறேதும் இருந்தால்,
என்னையும் நீ மன்னித்திடுவாய்!

**சு.நவேந்திரன்,** மாங்கேணி, மட்டக்களப்பு.

# மன்னிப்புக் கேட்டுப்பார்!

ஒரு தவறை செய்யும் போது – நீ
ஒருபடி தாழ்ந்து விடுகிறாய்!
அதே தவறுக்காய் – நீ
மனம் வருந்தி
மன்னிப்புக் கேட்டுப்பார்!
இன்னும் ஒருபடி உயர்வதை – நீ
உணர்ந்து கொள்வாய்!

**ர.சஜித்தா,** மருதன்குளம்.

# மன்னிக்க மாட்டாயா?

பிழைகளை நான் உணர்ந்தேன்
திருந்தி வாழ நினைக்கின்றேன் – மனம்
வருந்தி நானும் அழுகின்றேன்
என்னை மன்னிப்பாயா இறைவா!

உன் அன்பை மறந்தே வாழ்ந்தேனே!
உன்வழி நான் செல்ல மறந்தேனே!
உன் அன்புப் பிள்ளையாய் வாழ்ந்திடவே!
உருகியே தினம் அழுகின்றேன்!



உம் அன்பை உணர்ந்துவிட்டேன்!
உமதன்பால் தேற்றிடுமே
மாற்றிடுமே என்னை – நல்
மனிதனாய் வாழ்ந்திடவே!

உம் பாதம் நாடி வந்தேனே – இறைவா
அருள் மழை பொழிந்து,
மன்னிப்பு தந்தருள்வாய்
மனம் மகிழ்ந்தே நான் வாழ்ந்திட!

**கா.நிதர்ஷி,** மட்டக்களப்பு.

## தந்தையே என்னை மன்னியும்!

நான் மனம் கசிந்து குமுறுகின்றேன்!
செய்த குற்றங்களை எண்ணி!
செய்த பாவங்களுக்காய் - நான்
வருந்தி மன்னிப்பு வேண்டுகிறேன்!

நான் செய்த குற்றங்களால்
உறவை இழந்து,
உரிமையும் இழந்து,
பாவக் குழியில் வீழ்ந்து விட்டேன்!



உண்மை நேர்மை இழந்துவிட்டேன்!
பிறரையும் மன்னிக்கத் தவறிவிட்டேன்!
உன்னில் வாழ மறந்துவிட்டேன்!
உலகையும் பகைக்கத் துணிந்துவிட்டேன்!


கண்ணீர் சிந்துகின்றேன்
கருணை காட்டி - என்
பிழைகளை மறந்து
மன்னித்து ஏற்றருளும்!

**A.மிதுர்ஷியா,** தரம் - 9
சொறிக்கல்முனை.

## ம ன் னி ப் பு !

பிறர் செய்யும் தீவினைகளை மன்னிப்போம்!
வீண் துயருற்று வாழ்ந்திடுவோம்!
பிறர் நன்மைக்காக உதவிடுவோம்!
என்றும் நல்லதையே நினைத்திடுவோம்!

பிறர் தீமை செய்வதைத் தடுத்து,
அவர் பிழை மன்னித்து,
நல்வழி நடந்து நாளும்,
நற்கனி கொடுத்திடுவோம்!



பிறர் பிழையை மன்னித்தால்,
மனதில் அமைதி தோன்றிடுமே!
மகிழ்வாய் என்றும் இருந்திடவே,
மன்னிப்பை பெற்று, வழங்கி சிறந்திடுவோம்!

**செ.அஞ்சலா,** தரம் -10,
நவாலி நாவலர் மையம்.

**நம்பிக்கையையும் உறுதியையும் எப்போதும் யாரும் இழக்கக் கூடாது. வெற்றி என்பது தைரியமாக, உறுதியாக அர்ப்பணிக்கும் உழைப்பில், எண்ணத்தில் இருக்கின்றது. இன்றைக்கு எமக்கு மிக முக்கியமானதாகத் தேவையானது மற்றவரை மன்னிக்கும் உணர்வும், மனம் வருந்தி மன்னிப்பு பெறும் உணர்வுமே! அதுவே இந்தப் பூமியில் நம்முடைய பெருமையை உணர்த்தும்.**

## பழமொழிகளும் கருத்துக்களும்

- *உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா?*
  தகுதிக்கு மேல் எண்ணாதே.
- *எடுக்கிறது பிச்சை ஏறுவது பல்லக்கு.*
  வீண் பெருமை கொள்ளாதே.
- *கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.*
  நம்பிக்கையே நம்மைக் காக்கும்.
- *காற்றுள்ள போதே தூற்றிக் கொள்.*
  காலத்தைத் தவறவிடாதே.
- *கந்தையானாலும் கசக்கிக் கட்டு.*
  சுத்தமாக வாழப் பழகு.
- *மனமுண்டானால் இடமுண்டு.*
  விருப்பமே வெற்றி தரும்.
- *துட்டரைக் கண்டால் தூர விலகு.*
  தீமையை விட்டு விலகி நில்.
- *நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.*
  சுகமாய் வாழ்வதே கிடைத்தற்கரிய செல்வம்.
- *பொறுத்தார் பூமியை ஆள்வார்.*
  பொறுமையே உயர்வு தரும்.
- *பானையில் இருந்தால் அகப்பையில் வரும்.*
  உள்ளதுதான் கிடைக்கும்.

**க. விஸ்னுகாந்தன்,** தரம் - 7

## நாடுகளும் அதன் சுதந்திர தினங்களும்.

| | | |
|---|---|---|
| இலங்கை | பெப்ரவரி | 4 |
| கிரீஸ் | மார்ச் | 25 |
| பங்களாதேஷ் | ஏப்ரல் | 14 |
| இஸ்ரேல் | மே | 14 |
| நோர்வே | மே | 17 |
| இத்தாலி | ஜூன் | 2 |
| பிரேசில் | ஜூன் | 22 |
| கனடா | ஜூலை | 1 |
| பிரான்ஸ் | ஜூலை | 14 |
| சுவிட்சலாந்து | ஆகஸ்ட் | 1 |
| இந்தியா | ஆகஸ்ட் | 15 |
| சீனா | ஒக்டோபர் | 1 |
| ஸ்பெயின் | ஒக்டோபர் | 12 |
| போலந்து | நவம்பர் | 11 |
| பின்லாந்து | டிசெம்பர் | 6 |

**S.ரவீந்திகா,** ஈச்சிலம்பற்று.



*மரபியலின் தந்தை என அழைக்கப்படுபவர்* - **கிரிகோர் ஜோகன் மெண்டல்**

## அன்று சொன்னார்கள்! இன்று கடைப்பிடிப்போம்!

◈ நான் அரை நாள் உழைக்க விரும்புகிறேன். அது முதல் 12 மணி நேரமோ அல்லது இரண்டாவது 12 மணி நேரமோ என்பதைப் பற்றி எனக்குக் கவலை இல்லை.

**கம்மன்ஸ் வில்சன்.**

☛ நாம் செய்ய நினைத்த காரியத்தை முடிக்கும் வரை அக்காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும்.

◈ எனது திறமையை அடைய நான் எவ்வளவு கஷ்டப்பட்டு உழைத்தேன் என்பதை மக்கள் அறிந்தால், இதெல்லாம் ஒரு அதிசயமாகவே தோன்றாது.

**மைக்கல் ஆஞ்சலோ.**

☛ திறமையை அடைவது சுலபமல்ல. அதற்கான முயற்சியும், உழைப்பும் அவசியம்.

◈ ஒரு சராசரி மனிதன் தனது சக்தியிலும், திறமையிலும் 25% மட்டுமே தனது வேலைக்குச் செலவழிக்கிறான். தங்களது திறமையில் 50% க்கு மேல் செலவழிப்பவர்களை இந்த உலகமே பாராட்டுகிறது. 100% திறமையையும் அர்ப்பணிப்பவர்களுக்கு இவ்வுலகம் தலை வணங்குகிறது.

**ஆன்ட்ரூ கார்னெஜி.**

☛ எமக்கு உள்ள திறமைகளை வெளிப்படுத்தி, வளர்க்க வேண்டும். அதை நல்ல விடயங்களுக்காகப் பயன்படுத்த வேண்டும்.

**சு.கிஷாணிகா,** கோபாலபுரம்,
நிலாவெளி.

## இறைவனின் மன்னிப்பு!

பறவைகள் எவ்வளவுதான் – மேலே
பறந்து சென்றாலும் – தன்
கூட்டை மறப்பதில்லை!

அதேபோல்!

இவ்வுலகில் பிறந்த மனிதன் – செய்யும்
பாவங்கள், தவறுகளை – இறைவன்
மன்னிக்க மறப்பதில்லை!

**ஜெருசாந்,** தரம் - 4,
அரியாலை.

## உறுதி கொள்வோம்!



என்னால் முடியும் என்ற
எண்ணம் கொள்!
எதுவாயினும் – நீ
துணிந்து நில்!
மன்னிக்கும் பண்பை
மனதிலே கொள்!
மாண்புடன் வாழ
உறுதி கொள்!

**த. டிலக்ஷிகா,** மன்னார்.

## உறவை வளர்ப்போம்!

மன்னிக்கத் தெரிந்தவன் - உயர்
மனிதனாவான் மண்ணில்!
மன்னிக்கும் உள்ளமோ
மாணிக்க கோயிலப்பா!

மன்னிப்பு என்றால் என்னவென்று
கேட்கும் பரிதாப உலகமிது!
இந்த மன்னிப்பு இல்லாமல்
பாவ அவலங்கள் நடக்குதிங்கு!




மன்னிப்பிற்காக ஏங்கும் உள்ளமோ பல...
மன்னிக்கும் உள்ளமோ சில...
மன்னிக்கத் தெரியாத உள்ளத்தவன்
உறவை இழந்துவிடுகிறான்!

ஒருவரை ஒருவர் மன்னித்து,
ஓங்குவோம் உயர் பண்பினிலே!
அப்போது வளர்ந்திடும் - எமக்குள்
உண்மையான பிறரன்பு!

**நா.செறோன்,** சென்யூட்ஸ்.

## பகைமையை மறப்போம்!

முடிந்துவிடாத பகையை
முடித்து வைக்கிறது மன்னிப்பு!
தெரியாத தவறுகளை எல்லாம்
தெளிய வைக்கிறது மன்னிப்பு!
மனித மனத்தை - இன்று
உணர வைக்கிறது மன்னிப்பு!
மாபெரும் உலகிற்கே
மகிழ்வைத் தருகிறது மன்னிப்பு!




**S.ஜெனிபர்,** சகாயபுரம், மூதூர்.

நாம் முற்பிறவியில் நாம் செய்த பாவங்களுக்கும், நாம் அறிந்தும் அறியாமலும் செய்த பாவங்களுக்கும் பிராயச்சித்துமாக இப்போது நாம் செய்யும் தொண்டுகளும், சேவைகளும் அமையும். அப்போது எங்கள் பாவங்களும் மன்னிக்கப் பட்டுவிடும்.



உலகிலேயே இறப்பு வீதம் மிகக் குறைவாக உள்ள நாடு - கனடா

# புதிருக்கு என்ன விடை?



ஒரு நாட்டை அரசன் ஒருவன் ஆண்டு வந்தான். அவனுக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்தன. இரண்டுமே ஆண் குழந்தைகள்.

அவர்கள் இருவரில் யார் மூத்தவன், யார் இளையவன் என்பது யாருக்கும் தெரியாது. இருவருமே அறிவில் சிறந்தவர்களாக விளங்க வேண்டும் என்ற எண்ணத்தில், ஒருவனுக்கு அறிவழகன் என்றும், மற்றவனுக்கு மதியழகன் என்றும் பெயரிட்டான் அரசன்.

இருவரும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து இளைஞர்களானார்கள். இருவருமே கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்கினார்கள்.

அவர்களில் யாரைத் தனக்குப்பின் அரியணையில் அமர்த்துவது என்று சிந்தித்தான் அரசன். அவனால் எந்த முடிவுக்கும் வர முடியவில்லை.

தன் அமைச்சரை அழைத்த அவன் தன் குழப்பத்தைத் தெரிவித்தான். அறிவுள்ள நீதான் இதற்கு நல்ல வழி சொல்ல வேண்டும் என்று கேட்டான்.

சிந்தனையில் ஆழ்ந்த அமைச்சர் அரசே! இளவரசர் யார் என்பதைத் தேர்ந்தெடுக்கும் தகுதி உடையவர் என் குருநாதர்தான். அவர் இங்கிருந்து பத்துக்கல் தொலைவில் உள்ள அம்மன் கோயில் ஆயிரங்கால் மண்டபத்தில் தங்கியிருக்கிறார். அவரிடம் உங்கள் முத்திரை மோதிரத்தைக் கொடுப்போம்.

அம்மோதிரத்தைப் பெற்றுவருமாறு இளவரசர் இருவரையும் அனுப்புவோம்.

என் குருநாதர் அவர்கள் இருவரையும் சோதனை செய்து யார் அரியணைக்கு உரியவர் என்பதை முடிவு செய்வார் என்றார். அரசனும் இந்தத் திட்டத்தை ஏற்றுக்கொண்டான்.

தன் மகன் மதியழகனை அழைத்த அரசன் இங்கிருந்து பத்துக் கல் தொலைவில் உள்ள அம்மன் கோயில் ஆயிரங்கால் மண்டபம் உனக்குத் தெரியும். அங்கே ஒரு முதியவர் இருப்பார். அவர் தந்தாரானால் என் முத்திரை மோதிரத்தை வாங்கி வா என்றான்.

அதன்படி மதியழகன் ஆயிரங்கால் மண்டபத்தை நோக்கிப் பயணமானான். ஆனால் அங்கே பைத்தியக்காரன் மட்டும் இருந்தான். வேறு யாரும் இல்லை.

அவன் அருகே சென்ற மதியழகன், எங்கே அந்த முத்திரை மோதிரம்? என்னிடம் கொடு என்று கேட்டான்.

அந்தப் பைத்தியக்காரனோ இராவணனின் கடைசி முகம். வீட்டைத் தாங்கி நிற்பது. வேதத்தின் பெயர். வேடன் கையில் இருப்பது என்று உளறினான்.

மதியழகன் எத்தனையோ முறை கேட்ட போதும் இதே உளறலைத்தான் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தான்.

ஏமாற்றத்துடன் அரண்மனை திரும்பிய மதியழகன், அங்கே மண்டபத்தில் ஒரு பைத்தியக் காரனைத் தவிர வேறு யாரும் இல்லை. என்னால் முத்திரை மோதிரத்தைப் பெற முடியவில்லை என்றான்.

அறிவழகனை அழைத்த அரசன் நீ சென்று அந்த முத்திரை மோதிரத்தை வாங்கி வா என்றார்.

அறிவழகனும் அந்த மண்டபத்தில் பைத்தியக் காரனை மட்டுமே பார்த்தான். முத்திரை மோதிரம் குறித்து அவனிடம் விசாரித்தான்.

அந்தப் பைத்தியக்காரனோ வழக்கம் போல இராவணனின் கடைசி முகம். வீட்டைத் தாங்கி நிற்பது. வேதத்தின் பெயர். வேடன் கையில் இருப்பது என்று உளறிக் கொண்டிருந்தான்.

இதைக்கேட்ட அறிவழகன் இவன் உரையில் ஏதோ பொருள் இருக்கிறது. அந்தப் பொருளை விளங்கி விட்டால் முத்திரை மோதிரம் எங்கிருக்கிறது என்று கண்டுபிடித்து விடலாம் என்று நினைத்தான்.

அவன் சிந்தனைக்குப் பைத்தியக்காரன் சொன்ன சொற்களின் பொருள் புரிந்தது.

முத்திரை மோதிரம் இருக்கும் இடம் அறிந்த அவன் அம்மோதிரத்தை எடுத்துக் கொண்டு அரண்மனை திரும்பினான்.

நடந்ததை அறிந்த அரசன் தனக்குப் பின் அறிவழகனை அரசன் ஆக்கினான்.

மோதிரம் இருந்த இடத்தை அறிவழகன் எப்படிக் கண்டுபிடித்தான்? மோதிரம் எங்கே இருந்தது?

**சிந்தித்து விடையைக் கண்டு பிடியுங்கள்!**



அணுசக்தி மூலம் ஓடும் கப்பலைத் தயாரித்த முதல் நாடு - அமெரிக்கா

# மகிழ்ந்து வாழ மன்னிப்பு வேண்டும்!

மன்னித்தால் தான் – நாம்
மகிழ்ந்திடலாம் நம் நண்பருடன்!
சிறுவராம் நாம் என்றும்
சிறப்புடனே வாழ்ந்திடலாம்!

நாம் செய்யும் சுட்டித்தனங்களும்,
செல்லக் குறும்புகளும்,
மற்றவரைப் பாதித்தால் – உடன்
மன்னிப்புக் கேட்டிடுவோம்!

அம்மா எம்மை அடித்திட்டாலும்,
அன்புடன் எமை அணைத்திடுவார்!
அப்பா சற்று அதட்டினாலும்
அதை மறந்து ஆதரிப்பார்!

செய்யும் தவறை உணர்த்தி – நாம்
செய்த தவறை மன்னித்து மறந்து,
புத்திமதிகள் கூறி – என்றும்
புதிய வழியில் நடத்திடுவர்!



இதை மனதில் கொண்ட நாம்,
மன்னிப்பை மனதில் இருத்தி,
பகைவர்களை அன்புடனே,
மன்னித்து வாழ்ந்திடுவோம்!

மன்னிக்கும் மனத்தினாலே,
நண்பர்களே எமைச் சூழ்வர்,
பகைமை இருள் அகன்றிடுமே!
அன்பு ஒளி பரவிடுமே!

மன்னித்து வாழ்வோம் – மண்ணில்
மணம் வீசும் மலர்களாக!
பலரும் விரும்பும் பிள்ளைகளாக
வாழ்ந்திடுவோம் மகிழ்வுடனே!

**கி.றினோஜா,** யோசப்வாஸ் நகர்,
தோட்டவெளி.

# பொன் மொழிகள்.

- உழைப்பாளிகள் வியர்வையை சிந்தும் முன்பே, அவர்களது கூலியைக் கொடுக்க வேண்டும்.
- விவேகமே மனிதனை மிருகங்களிடம் இருந்து பிரித்துக் காட்டுகிறது.
- சிறந்தவராக விளங்கிட வேண்டும்! சிந்தனையில் தூய்மை வேண்டும்!
- சம்பாதிக்க வேண்டியவை கல்வி, செல்வம், புண்ணியம்.
- சோம்பலே தீமைக்கும், துன்பத்துக்கும் பிறப்பிடம்.

**க.றேனுஜன்,** தரம் - 5,
ஆலன்குளம்.

# மன்னித்து வாழ்வோம்!

மன்னிக்கும் பண்பு உடையவனே முழு மனிதனாவான். ஒரு தவறு செய்தவன் அதைத் தவறு என உணர்ந்து மனம் வருந்தி மன்னிப்புக் கேட்கும் போது அதை ஏற்றுத்தான் ஆகவேண்டும். அப்போதுதான் அவன் நல்லவனாக வாழ முற்படுவான்.

**"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண**
**நன்னயம் செய்து விடல்."**

என்று திருவள்ளுவர் கூறியது போல், நமக்குத் தீமை செய்யும் ஒருவனுக்கு அவன் வழியிலேயே பதிலுக்குச் செய்யாமல், நல்லதையே செய்ய வேண்டும். அப்போது தான் தான் செய்தது தவறு என்பதை நன்கு உணர்ந்து கொள்வான்.

நாம் எவ்வளவு பிழைகள், தவறுகள் செய்திருக்கிறோம். அத்தனையையும் நம் பெற்றோர் மன்னித்து நம்மை நல்வழியில் நடத்தவில்லையா? அப்படி செய்ததால் தான் நாம் சமுதாயத்தில் தலை நிமிர்ந்து நிற்கிறோம்.

மன்னிக்கும் மனமிருந்தால் பழிவாங்கும் எண்ணங்கள் பறந்தோடிவிடும். தீய எண்ணங்கள் எமை நெருங்காது.

தூய உள்ளத்தோராய் நாம் துணிந்து வாழ மன்னிப்பே மருந்தாகும். அனைத்து மதங்களும் அன்பையும், மன்னிப்பையுமே அனைவருக்கும் எடுத்துரைக்கின்றன.

எனவே மன்னித்து, மறந்து மன்னிப்பை மறவாது அனைவரிடத்திலும் அன்புடையோராய் வாழ்வோம்!

**R.ஹரேஷ்,** சகாயபுரம்,
மூதூர்.

# எச்சரிக்கையாக இருங்கள்!

அன்றாடப் பொழுதுபோக்கு அம்சங்களும் பத்திரிகைச் செய்திகளும் மனித மனத்தை தன்வயப்படுத்தி விடுகின்றன. நீங்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும், உங்களுக்கு எது முக்கியம் உங்கள் நேரத்தை எப்படிச் செலவழிக்க வேண்டும் என்பதையெல்லாம் இவற்றிலிருந்து நீங்கள் கற்றுக் கொள்ளும் போது உங்களுடைய நினைவு, மனம் சுயசிந்தனையை இழந்துவிடுகின்றது.

இந்தப் போக்குகளின் விளைவாக ஆழ்மனத் திட்டங்களை வெளிச் சக்திகள் உருவாக்கத் தொடங்கிவிடுகின்றன. வெளிச் சக்திகள் மீது உங்களுக்குக் கட்டுப்பாடு இருக்க வழியில்லை. எனவே சொந்த உருவகங்களை நீங்கள் ஏற்படுத்த முடியாமல் போய்விடுகின்றது. இது உங்களுடைய வளர்ச்சிக்குப் பெரும் தடையாகி விடுகின்றது. நீங்களும் உங்களுடைய எதிர்காலமும் வெளிச் சக்திகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்து விடுகின்றது. எனவே நீங்கள் எச்சரிக்கையாக இருப்பது நல்லது.



முச்சக்கர வண்டியை அதிக அளவில் தயாரிக்கும் நாடு - ஜப்பான்

# வாழ்வை உயர்த்தும் சிந்தனைகள்

- ☆ கேட்கும் போது கொடுப்பது நல்லது. கேட்காதபோதும், புரிந்து கொண்டு கொடுப்பது அதைவிட நல்லது.
- ☆ கடல் உண்மையாகவே களங்கமற்றவர்களுடன் சேர்ந்துதான் எப்போதும் சிரிக்கிறது.
- ☆ எதையும் உடனே செய்து முடித்துவிடுங்கள். ஒதுக்கி வைத்தால், சுமை கூடி ஒன்றையுமே செய்ய முடியாமல் போய்விடும்.
- ☆ காலத்தை உங்கள் பணத்தைப் போல் எண்ணிச் செலவிடுங்கள்.
- ☆ மற்றவர்களுக்குச் சரியென்று பட்டதையல்ல, உங்களுக்குச் சரியென்று பட்டதைச் செய்யுங்கள்.
- ☆ நீங்கள் வாழ்வில் உயர்ந்திட, எதிர்கொள்ளும் ஒவ்வொரு தடைக்கல்லும் ஒரு படிக்கல்லுதான்.
- ☆ பணம் செலவில்லாமல் கிடைப்பது அனுபவம்.
- ☆ குறுகிய மனதில், நல்ல சிந்தனைகள் சீக்கிரம் சிறகிழந்து போய்விடும்.
- ☆ ஒரு சமயத்தில் ஒரு காரியம் என்பதே புத்திசாலித்தனம்.
- ☆ உங்கள் உடல், உங்கள் ஆன்மாவின் வீணை. அதை பக்குவமாக மீட்டுங்கள்.
- ☆ கொள்கைக்காகப் போராடுவது சுலபம். கொள்கைப்படி வாழ்வதுதான் கடினம்.
- ☆ நல்ல யோசனை, நல்ல திட்டங்களுக்காகக் காத்துக் கிடக்க வேண்டாம். கைவசம் உள்ளதை சிறப்பாகச் செய்து முடியுங்கள். நிச்சயமாக நல்ல வாய்ப்புக்கள் பின்னால் வரும்.
- ☆ இளைஞர்கள் நிலை நாட்ட வேண்டியது செயல் ஆர்வமும், ஈடுபாடும், ஒழுக்கமும்தான்.
- ☆ புதிதாகத் தொழிலில் இறங்கியவர்களுக்கு, சம்பாத்தியத்தை விட பெறும் அனுபவமே முக்கியம்.
- ☆ பாய்ந்து கொண்டே இருக்கும் நீரோடையாக இருங்கள்.
- ☆ தாழாதீகள்! எவரையும் தாழ்த்தாதீகள்.

# Proverbs - பழமொழிகள்

- ✦ Good to forgive, best to forget.
  மன்னிப்பது நலம், மன்னித்த பின் அதை மறப்பது மிக்க நலம்.
- ✦ Get from each according to his abilities, give to each according to his needs.
  திறமைக்கேற்றபடி பெறு, தேவைக்கேற்றபடி கொடு.
- ✦ A good neighbour, a good tomorrow.
  அடுத்த வீட்டுக்காரன் நல்லவனானால் எதிர்காலம் நன்றாக இருக்கும்.
- ✦ Never say die.
  சாவேன் என்று ஒருபோதும் சொல்லாதே.
- ✦ Nature is the true law.
  இயற்கையே உண்மை நியதி.
- ✦ To be wise and love exceeds man's might.
  அறிவும், அன்பும் மனிதன் வலிமையை மிஞ்சும்.
- ✦ A merry heart goes all the day.
  மகிழ்ச்சியால் இதயம் நாளெல்லாம் நிலைக்கும்.
- ✦ Little drops of water make the mighty ocean.
  சிறு துளி பெரு வெள்ளம்.
- ✦ A little knowledge is a dangerous thing.
  அரை குறை அறிவு ஆபத்தானது.
- ✦ Do not learn to do that from which there is no advantage.
  நன்மையில்லாததைச் செய்யக் கற்காதே.
- ✦ Knowledge is no burden.
  அறிவு ஒரு சுமை அன்று.
- ✦ Science is organised knowledge.
  ஒழுங்குபடுத்தப்பட்ட அறிவே விஞ்ஞானம்.
- ✦ Honour lies in honest toil.
  நேர்மையான உழைப்பில் தான் நன் மதிப்பிருக்கும்.
- ✦ Open confession is good for the soul.
  பகிரங்கமாக ஒப்புக் கொள்வது ஆன்மாவுக்கு நல்லது.



உலகிலே உப்பு அதிகமாகக் கிடைக்கும் இடம் - சீனா

## பொது அறிவு போட்டா போட்டி – 37

1. செயற்கைக் கடல் உள்ள நாடு எது?
2. உலகினை முதன் முதல் சுற்றிவந்த கப்பலின் பெயர் என்ன?
3. உலகம் முழுவதும் வாழக்கூடிய ஒரே மிருகம் எது?
4. பிலிபைன்ஸ் தீவுகளின் எண்ணிக்கை எத்தனை?
5. பூமிக்கு மிக அருகில் உள்ள நட்சத்திரம் எது?
6. இலேசான வாயு எது?
7. முட்டையின் வெள்ளைக்கருவில் உள்ள உயிர்ச்சத்து எது?
8. உலகின் முதல் பெண் பிரதமர் யார்?
9. மனிதனுக்கு ஒரு நாளைக்குத் தேவையான உணவின் அளவு எவ்வளவு?
   A. 2000 கலோரி B. 2250 கலோரி
   C. 2500 கலோரி D. 3000 கலோரி
10. உலகின் முதலாவது தேசியப் பூங்கா எது?
    A. பாபிலோன் தோட்டம்
    B. எல்லோ ஸ்லோன் பூங்கா
    C. லாஸ் ஏஞ்சல் தேசியப் பூங்கா
    D. மைசூர் தேசியப் பூங்கா

### பொது அறிவு போட்டா போட்டி – 36 விடைகள்

1. ஆபிரிக்கா
2. பைபிள்
3. கல்சியம் காபனேற்று ($Ca,co_3$)
4. 20
5. பன்றி
6. பாசி
7. இரும்புச்சத்து
8. இரும்பு
9. 35 மில்லியன்
10. மியூனிச்

### 9 மதிப்பெண்களைப் பெற்று பரிசு பெறுபவர்கள்

1. **தி.திலுக்ஷன், தரம் - 5.**
2. **யோ.பியூலா, தரம் - 4**
   யோசப்வாஸ் நகர்,
   தோட்டவெளி.

## விடுகதையும் விடையும்

1. ஏறினால் வழுக்கும். இனிய கனி தரும். காயைத் தின்றால் துவர்க்கும். அது என்ன?
2. ஒரு முழ மூங்கிலில் ஒய்யார கீதம். அது என்ன?
3. ஒற்றைக் கால் மனிதனுக்கு ஒன்பது கை அது என்ன?
4. காலைக் கடிக்கும், காவல் காக்கும் நாயல்ல. அது என்ன?
5. கையுண்டு காலில்லை. கழுத்துண்டு தலையில்லை. அது என்ன?

**L. சௌமியா,** வரோதயநகர், குச்சவெளி.

6. அழுவேன் சிரிப்பேன் அனைத்தும் செய்வேன். நான் யார்?
7. இவன் வாலுக்கு வையகமே நடுங்கும். அவன் யார்?
8. ஆடும் வரை ஆட்டம் ஆடியபின் ஓட்டம் . அது உன்ன?
9. மண்ணுக்குள் கிடப்பவள். மங்களகரமானவள். அவள் யார்?
10. நான்கு கால்களிருந்தும் நடக்கமாட்டான். அவன் யார்?

**அ.தர்மினி,** பாளையடித்தோணா,
மட்டக்களப்பு.

### விடைகள்

1. வாழை
2. புல்லாங்குழல்
3. மரம்
4. முள்
5. சட்டை
6. முகம் பார்க்கும் கண்ணாடி
7. தேள்
8. இதயம்
9. மஞ்சள்
10. நாற்காலி

### புதிருக்கான விடை:

இராவணனது கடைசி முகம் என்பது பத்தாவது. வீட்டைத் தாங்கி நிற்பது தூண். வேதத்தின் பெயர் என்பது மறை. வேடன் கையில் இருப்பது வில். நான்கு சொற்களையும் சேர்த்துப் பார்த்தால் பத்தாவது தூண் மறைவில் என்ற பொருள் வந்தது. அங்கு சென்ற அவன் கண்களுக்கு முத்திரை மோதிரம் தென்பட்டது.



வானம் நீல நிறமாகக் காட்சியளிக்கக் காரணம் - ஒளிச்சிதறல்

# உறவுகளுக்காய் உயிர் கொடுத்த உத்தமன்!

இறைவனின் அழைப்பதனை
இனிதாய் ஏற்று என்றும்
அன்புப் பணிதனை
ஆழமாய் விதைத்திட்டார்!
ஆற்றல் நிறைபெற்ற அன்புக் குருவே!
உம்மை நாம் இனி எங்கு காண்போம்?

உதட்டளவு சிரிப்பில் உண்மை இருந்தது!
உள்ளத்தில் என்றும் தூய்மை இருந்தது!
உற்ற உறவுகளை நீர் உறங்கும் வரை,
உயிரோடு காத்திட்ட உத்தம குரு நீரே!

அழைப்பின் மேன்மைக்கு - நல்ல
அர்த்தம் கொடுத்தீர்!
ஆயன் இல்லா ஆடுகளுக்கு - நீர்
அடைக்கலம் கொடுத்தீர்!
அண்டி வந்தோரை - உண்மை
அன்போடு அரவணைத்தீர்!
அலைந்து திரிந்த மக்களுக்கும் - உடன்
ஆதரவு கொடுத்தீர்!

முள்ளிவாய்க்காலில் முடங்கியே இருந்து,
மூன்று வேளையும் உணவு இன்றி,
மூச்சுத் திணறப் பதுங்கு குழியில்,
முடிவுவருமெனக் காத்திருந்தீரே!

கஞ்சிக் கொட்டில்தான் தஞ்சம் என்று,
உற்ற கரங்களுக்கு உறுதியளித்தீரே!
எதுவரினும் கடவுள் நம்மோடு உள்ளார்!
என கருத்தாய் மொழிந்தீரே தந்தையே!

நீர் செய்த அன்புப் பணியில் என்றும்,
நிதானங்கள் பல உண்டு!
நிர்ணயித்த திட்டங்களில் நிறைவு உண்டு!
கண்டுகொண்டோம் யாம் உம் பணியில்!

மெழுகாய் உருகி எரி திரியாய் மாறி,
உம்மை நம்பிவந்த மக்களுக்கு,
உற்ற தந்தையாய், நல்ல நண்பனாய் இருந்து,
வழி காட்டிய குருமணி நீரல்லவோ!

காலத்தால் அழியாத காருண்யமாய்,
கலங்கரை விளக்காயும் திகழ்கின்றீர்!
உம் வாழ்வே எமக்கு நல் உதாரணம்!
உம்மை நாம் மறப்பது என்பது முடியாது!

**JRS குடும்பம்,** யாழ்ப்பாணம்.



# கண்ணீர் காணிக்கை!

ஈழமண் அளித்த இன்முக வேந்தனே!
பார் போற்றும் பரம் பொருள் பணியேற்று,
அகதிகளாய் அவதியுறும்,
அன்பர்களைக் காத்திடவே!
அகதிப் பணி என்னும்
அன்புப் பணியில் இணைந்தீரே!

அன்பு மொழி பேசினீரே - எம்மை
ஆதரவாய் தேற்றுவீரே!
நீர் அமைத்த கல்விக் கூடங்கள் - உம்
கால்வரவைக் காணத் துடிக்குதிங்கே!

அகதிப்பணிக்காய் உமை
அர்ப்பணித்த நீர் - இன்று
அவசரமாய் எங்கு சென்றீர்?
ஆழ்துயரில் வீழ்த்தி எம்மை!

அமைதியுடன் வாழ - எமக்கு
அருள் வேண்ட சென்றீரோ?
உம்பிரிவால் நாமிங்கே,
உளம் கசிந்து உருகுகின்றோம்!

**JRS குடும்பம்,** மட்டக்களப்பு.

# தாங்க முடியவில்லை உம் பிரிவுதனை!

எம் சின்ன இதயத்தில் எத்தனை காயங்கள்!
எத்தனை கவலைகள், எத்தனை துன்பங்கள்!
எப்படித் தாங்கிடுவோம் தந்தையே!
உம் பிரிவுதனை நாமிங்கே!

அன்பாகப் பழகி அனைவரையும்,
ஆட்கொண்ட எங்கள் தந்தையே!
அகதிப் பணியில், உம்மை அர்ப்பணித்து,
நீர் ஆற்றிய தொண்டுகள் எத்தனை எத்தனை!

உயிர் பிரியும் நேரத்தை விட,
உறவுகள் பிரியும் நேரமே மிகக் கொடூரமானது!
உடல்களை ஒடித்து, உணர்வுகளை உருக்குலைத்து
உணர்வற்று நிற்கின்றோம் உம் நினைவுதனில்!

தாங்க முடியவில்லை ஐயா உம் பிரிவுதனை!
நாட்கள் முப்பது கடந்தாலும்,
ஆண்டு பல ஆனாலும்,
உம்மை எப்படி மறப்போம் தந்தையே!
தாழாத துயரத்தில் தவிக்கின்றோம் ஐயா!
எங்கே சென்றீர் எமைவிட்டு!

**JRS குடும்பம்,** மன்னார்.




உலகின் முதல் பெண் பைலட் - மிஸ்யேல்பிங்கல்டீன் (இஸ்ரேல்)

## என்றும் அன்பாய் இருந்தார்!

மாசற்ற மழையாய் மண்ணில் தோன்றி
தொலைதூரம் தொலைந்து போன
தொடு வானமாய் எங்கே சென்றீர்?
அகதிகளாய் இடம் பெயர்ந்து,
அல்லலுற்ற மக்களின்,
அவலம் துடைத்த நீர், எங்கே சென்றீர்?
இறை பணிக்காய் உமை அர்ப்பணித்து,
இரவு பகல் பாரா உழைத்து வந்தீர்!
தோழமையோடு குரல் கொடுத்தீர்!
நேசக் கரம் நீட்டி – மிகுந்த
பாசத்தோடு பணி செய்தீர்!
பரமனின் அன்பிலும் நிலைத்திருந்தீர்!
துன்பத்தில் நீர் இருந்த போதும் – பல
துயரங்களில் ஆழ்ந்தபோதும்,
தூய உள்ளத்துடன் பணிபுரிந்தீரே!
ஆழ்கடலில் சங்கமித்த மழைத்துளியாய்
ஆனதென்ன உம் வாழ்வு – பாதியிலே
எமை விட்டு மறைந்துதான் போனதென்ன?
கலைந்து போன உம்
கால்த்தடங்களைக் கண்ணீரோடு தேடுகிறோம்!
கவலையால் நொந்து தினம் வாடுகிறோம்!
மண்ணில் செய்த சேவைகள் போதுமென்றோ
விண்ணிற்கு இறையவன் அழைத்துக்கொண்டார்!
நாம் என்று உமைக் காண்போம் இனி?

**JRS குடும்பம்,** வவுனியா.



## என்றும் வற்றாத ஜீவ நதி!

அறிவின் சிகரமாம் யாழ்மண்ணிலே!
அவதரித்த முத்துமணி
சரத் என்னும் ஜீவநதி!

இறையவன் தான் கொடுத்த –
இணையில்லா அன்புக் கொடை
நீரன்றோ!

பொக்கிஷமாய் உமைப் பெற
என்ன தவம் செய்தனரோ
உம் அருமைப் பெற்றோர்கள்!

பரமனவன் பணிதனில்
தணியாத காதலால்
மாசறு மாணிக்கமாய்
ஈசனவன் பணி செய்தீர்!

காலத்தின் கோலத்தால்
சிதறுண்ட மக்களை
அன்போடு அரவணைத்து
அயராது பணிபுரிந்தீர்!

துயர்துடைக்க யாருமின்றி
துவண்டுபோன மக்களுக்கு,
கரை சேர்க்கும் ஓடமாய்
கடைசிவரை துணைவந்தீர்!

கல்லிலும், முள்ளிலும்
காற்தடங்கள் நீர் பதித்தீர்!
கடைசிப் பயணம் இதுவென
புரிந்ததோ அன்று உமக்கு!

வற்றியதோர் ஜீவநதி!
காய்ந்ததே கங்கைநதி!
அணைந்ததோர் ஒளி விளக்கு,
இருண்டதோர் வெண்விடியல்!

கண்களைக் குளமாக்கி,
இதயத்தை ரணமாக்கி,
இறைவனடி நீர் சேர்ந்தீர்!

எமைவிட்டு பிரிந்து சென்றாலும்,
நீங்காமல் எம் நெஞ்சமதில்,
நிறைந்து வாழ்கின்றீர்!

உமதான்மா சாந்தி பெற,
உமக்காக பிரார்த்திக்கின்றோம்!

**JRS உளவளத்துணையாளர்கள்,**
மன்னார்.



கிறிஸ்துவின் பாதை தனைக் காட்டிட,
புனித பணி ஏற்றீர்!
உம்பணி தனைச் செய்திட
இயேசு சபை அகதிப் பணியில்
பணி ஏற்றீர்!
புதிய நம்பிக்கையுடன்
புதிய பாதையில்,
உம் பாதங்களைப் பதித்தீர்!

அண்ணல் அருப்பே வழிகாட்டலில்
ஏழையரை முன்னிறுத்தி,
முழு விடுதலைக்காய் பாடுபட்டீர்!
வேறுபாடு எதுவுமின்றி
நேசக்கரம் நீட்டி பணிபுரிந்தீர்!
உம் பெயர் கேட்டால் எம்
கண்களில் வரும் கண்ணீர் கூட
ஆனந்தக் கண்ணீராகும்!

எம் உறவுகளின் அவலக்குரல் கேட்டு
நாடி ஓடி வந்தீரே!
அவர்கள் பட்ட வேதனை கண்டீரே!
துடிதுடித்தது உம் இதயம்!
மறுகணமே அமைதியானீர்!

ஒரு வார்த்தை கூட பேசவில்லை நீர்!
இறைவனின் பாதங்களில் சரணடைந்தீர்!
இச் செய்தி கேட்டு எம் இதயம் வெடித்ததே!
உம் இழப்பை தாங்க முடியாது
தவித்து நிற்கின்றோம் - நாளும்
உம் நினைவுகளுடன்!

**அ.நிறோஜினி, JRS** கணனி மையம், யாழ்ப்பாணம்.



*மனித உடலில் குளிர்ச்சியான பாகம் -* **மூக்கின் நுனி**

# இங்கிலீஷ் ரொம்ப ஈஸி - 37

## கட்டளை மற்றும் வேண்டுகோளைக் குறிக்கும் வாக்கியங்கள்

## Sentences of oder and request

- முன்னால் பார்.
  Look ahead.
- மெதுவாக ஓட்டு.
  Drive slowly.
- திரும்பிப் போ.
  Go back.
- அவனை / அவளை கவனித்துக் கொள்.
  Take care of him/her.
- கொஞ்சம் கேளுங்கள்.
  Just listen.
- சீக்கிரம் வரவும்.
  Come soon.
- என்னைப் பார்க்க விடு.
  Let me see.
- தயாராக இரு.
  Be ready.
- பேசும் முன் யோசி.
  Think before you speak.
- அவசியம் வரவும்.
  Do come.
- பொருட்படுத்தாதே.
  Never mind.
- என்னைத் தனியாக விடு.
  Leve me alone
- போகட்டும் விடு.
  Let it go.
- கொஞ்சம் நில்லு.
  Hold on.
- கவலைப்படாதே.
  Dont worry.
- ஒருபோதும் மறக்காதே.
  Never forget.
- மறுபடியும் முயற்சி செய்.
  Please try again.
- கொஞ்சம் பொறுத்திரு.
  Please wait a bit.
- உள்ளே வாருங்கள்.
  Please come in.
- தயவு செய்து அமருங்கள்.
  Please be seated.
- தயவு செய்து பதில் கூறு / எழுது.
  Please reply.
- என்னை சங்கடப்படுத்தாதே.
  Plese don't embarrass me.
- உன்னிடம் நம்பிக்கை கொள்.
  Have faith in your self.
- தயவு செய்து எனக்கு உதவி செய்.
  Please help me.
- கவனமாக இரு.
  Be careful.
- புரிந்து கொள்ள முயற்சி செய்.
  Try to understand.
- நகர்ந்து கொள்ளவும்.
  Move aside.
- நகைச்சுவை வேண்டாம்.
  Don't cut jokes.
- அர்த்தமில்லாமல் பேசாதே.
  Don't talk nonsense.
- அசடாக இருக்காதே.
  Don't be silly.
- என்னுடன் வா / என்னைத் தொடர்.
  Come with me / follow me.
- இடத்தைக் காலி செய்.
  Vacate the place.



உலகில் முதன் முதல் நாணயங்களை அறிமுகப்படுத்தியவர்கள் - **கிரேக்கர்கள்**

# மன்னியுங்கள்!



மனிதனில் மனிதம் மலர்கிறது!
காரணம் மன்னிப்பு!
மன்னிப்பு மட்டும் இல்லாவிட்டால்,
மனிதம் என்றோ மரணித்திருக்கும்!

மன்னிக்கும் உள்ளமே
கடவுளின் இல்லம்!
மன்னியுங்கள் மனிதர்களே!
உங்கள் உள்ளங்கள்
இறைவனின் - அன்பு
இல்லங்களாகட்டும்!

**வ.விதுஜா,** நவாலி நாவலர் மையம்.

# உனைப் பிரிந்து தவிக்கிறேன்!

நண்பியே!
உறைந்த பனி நதியில் நான்!
ஒற்றை மீன் குஞ்சாக
இறுகிக் கிடக்கின்றேன்!
என் மனதை புரியாது - நீ
என்னை வெறுத்து ஒதுக்கி விட்டாய்!
நான் உன்னை மன்னித்துவிட்டேன்!
ஏன் என்மேல் இன்னும் கோபம்?
இறப்பு வரும் முன்னே - நீ
என்னை புதைத்து விடாதே!
நான் தவறு புரிந்திருந்தால் - நீ
என்னையும் மன்னித்து விடு!

**இ.நந்தா, JRS** உற்பத்தி மையம்,
ஆனைக்கோட்டை.

# மனம் வருந்துகிறேன்!



இறைவன் ஒருவன் அவனை
இதயத்தில் வைத்தேன்!
மறைவாய் இருந்த போதும் – அவனை
மனதால் அறிந்து கொண்டேன்!
தினமும் ஐந்து பொழுதும் – என்னை
மன்னிக்கும் படி தியானம் செய்து
தொழுது நின்றேன்!
மனதின் சுமைகள் மறைய
மன்றாடிப் புலம்பி நின்றேன்!
கண்ணீர் சிந்தி அழுதேன்!
அவர் என்னை மன்னித்துவிட்டார்!
அவர் அன்பினையும் உணர்ந்தேன்!
இனி நானும் மன்னித்து வாழ்வேன்!
மனம் மகிழ்ந்தே இறைவனைப் போற்றிடுவேன்!

**சனுஜா அருள்,** கிளிவெட்டி.

# நல்லோராய் வாழ்வோம்!



கண்ணைக் கெடுத்தவர் என்றாலும்
அவரை மன்னிப்பதே நல்ல பண்பு!
மன்னிக்கும் குணத்தினாலே!
மகத்தான மனிதர்கள் பலர்!

பழைய பகைமை மறந்து
புதிய நினைவுகள் புகுந்தால்,
மறப்பதும் மன்னிப்பதும்
தனித்துவமாகிவிடும்!

இன்னலும் வேதனைகளும்,
யாவருக்கும் ஒன்றே!
இதை உணர்ந்து செயற்பட்டால்,
எல்லோரும் நல்லோராய் வாழலாம்!

**ஞா.கஜேந்தினி,** கல்லடி டச்பார்,
மட்டக்களப்பு.

# புதுயுகம் படைத்திடப் புறப்படுவோம்.!

இயற்கையும் செயற்கையும் நிறைந்த உலகில் வாழும் மனிதர்கள் நாம். எல்லாக் காலத்திலும், எல்லாச் சமுதாயத்திலும், எங்களை வெறுத்து ஒதுக்கி வாழ்பவர்களை நாம் மிகுதியாக அன்பு செய்ய வேண்டும். அவர்கள் எமக்குச் செய்பவைகளை நாம் மன்னித்து மறக்க வேண்டும்.

மாணவர்களாகிய நாம் கற்பதில் மட்டு மல்லாமல் நல்ல பண்புகளைப் பேணி வளர்க்க மறந்துவிடக் கூடாது. எனவே என் அருமை நண்பர்களே! நாம் நினைத்தால், அனைவரும் ஒன்று சேர்ந்து அழகிய உலகினை உருவாக்கி விடலாம். வாருங்கள் நாம் எல்லோரும் கைகோர்த்து ஒன்றாய் சேர்ந்து புறப்படுவோம்.

**த.விதுசன்,** சகாயபுரம்.

# எமது நாடு இலங்கை!

- இலங்கையின் தேசிய மலர் ~ **நீலோற்பலம்.**
- இலங்கையின் தேசிய மரம் ~ **நாகா.**
- இலங்கையின் தேசிய விளையாட்டு ~ **கரப்பந்து.**
- இலங்கையின் தேசிய மிருகம் ~ **மரஅணில்.**
- இலங்கையில் நீளமான நதி ~ **மகாவலி கங்கை.**
- இலங்கையில் உயரமான மலை ~ **பீதுருதாலகால.**
- இலங்கையின் தாவரவியற் பூங்கா ~ **பேராதனைப் பூங்கா.**

**ச.லாவண்யா,** தரம் - 5, செட்டிகுளம்.




உலகின் சக்கரைக் கிண்ணம் என்று அழைக்கப்படும் நாடு - **கியூபா**

# விஞ்ஞான விளையாட்டு - 18

## மிதக்கும் முட்டை

**தேவையான பொருட்கள் :** ஒரு முட்டை
இரண்டு கண்ணாடிக் குவளை
நீர்
ஒரு மேசைக் கரண்டி உப்பு




**செய்முறை :** (i) ஒரு கண்ணாடிக் குவளையில் நீரை நிரப்பி அதனுள் மெதுவாக முட்டையைப் போடுங்கள். முட்டை அமிழ்ந்து குவளையின் அடியில் போய்த் தங்கும்.

(ii) பின்னர் அந்த முட்டையை வெளியே எடுத்துவிட்டு, குவளையில் உள்ள நீரினுள் உப்பை இட்டு உப்பு நீரில் கரையும் படி நன்றாகக் கலக்கவும். பின்னர் அதனுள் முட்டையை போடவும். முட்டை மிதக்கும்.

(iii) முட்டையை வெளியே எடுத்துவிட்டு உப்பு நீரின் அரைவாசியை அகற்றிவிட்டு அதனுள் சுத்தமான நீரை மெதுவாக இடவும். குவளை நிரம்பியதும் முட்டையைப் போட்டுப் பாருங்கள். அது குவளையின் நடுப்பகுதியில் மிதக்கும்.

**காரணம் :** (i) முட்டை நீரின் எடையை விட அதிகம் கொண்டிருப்பதால் அமிழ்ந்துவிடுகிறது.

(ii) உப்பு நீர் சுத்தமான நீரை விட அடர்த்தி கூடியது. அதன் காரணமாகவே முட்டை மிதக்கிறது.

(iii) உப்பு நீருக்கு மேல் சுத்த நீர் இருப்பதனால் முட்டையானது சுத்த நீருக்கும் உப்பு நீருக்கும் இடையில் மிதக்கிறது.

# விட்டுக் கொடுங்கள்!



விட்டுக் கொடுக்கும் மனப் பக்குவம் இல்லாத காரணத்தால், எத்தனையோ பேர் வாழ்க்கையும் நரக மாகித் தொலைந்து போய் இருக்கிறது.

மாணவர்களாகிய நீங்கள் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு விட்டுக் கொடுத்து வாழ வேண்டும்.

அதனால் ஒன்றும் யாருக்கும் குறைந்து விடப் போவதில்லை. அப்படி ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு, விட்டுக் கொடுத்து நடந்து கொள்ளும் போது தங்களையே அறியாமல் உண்மை அன்பு வளரக் காரணமாய் அமைகின்றது.

ஒரு குடும்பத்துக்குள் வாழும் போது விட்டுக் கொடுத்து வாழும் பண்பு இருந்தால் தான் ஒற்றுமையுடன் வாழ முடியும். இல்லையென்றால் எம்மை யாரும் நெருங்கமாட்டார்கள். உண்மை அன்புடன் பழகமாட்டார்கள்.

பிறரின் எண்ணங்களுக்கு மதிப்புக் கொடுக்கும் மனநிலை கொண்டவர்களால் மட்டுமே விட்டுக் கொடுத்து வாழ முடியும்.

உங்களின் வளர்ச்சியில் அக்கறை உள்ளவர்களோடு ஏற்படுகின்ற பிரச்சினைகளில் நீங்கள் விட்டுக் கொடுக்க வேண்டும். அவர்களுடன் உங்கள் பிடிவாதத்தைக் காண்பித்தீர்களானால் அவர்களின் அன்பையும், அவர்கள் உங்களில் வைத்துள்ள ஈடுபாட்டையும் நீங்கள் இழந்து விட நேரிடும்.

# ஆபிரகாம் லிங்கன்



இல்லினாய்ஸ் சட்ட சபைத் தேர்தல் இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும். அவ்வாறு மூன்று முறை நடைபெற்ற தேர்தல்களில் ஆபிரகாம் லிங்கன் மூன்று முறை போட்டியிட்டு பெருவாரியான வாக்குகளைப் பெற்று, வெற்றிவாகை சூடினார்.

இதற்கிடையில் இவரது படிப்பும் தொடர்ந்தது. அவரது இருபத்தெட்டாவது வயதிலே முழுமை பெற்ற சட்டத்தரணியானார். இல்லினாய்சின் புதுத் தலை நகரான ஸ்பிரிங் பீல்டுக்குச் சென்று அங்கு குடியேறினார். தனது நண்பர் ஒருவரைச் சேர்த்துக் கொண்டு, அலுவலகம் ஒன்றை அமைத்துத் தனது சட்டத்தரணி வேலையை ஆரம்பித்தார்.

1842 ஆம் ஆண்டின் இறுதியில் இவருக்குத் திருமணம் நடந்தது. நான்கு ஆண்டுகளின் பின்னர் மத்திய ஜில்லாவின் (இல்லினாய்ஸ்) காங்கிரஸ் பிரதிநிதியாக இவர் தேர்ந்தெடுக்கப் பட்டார். அடுத்த ஆண்டில் வாஷிங்டன் காங்கிரசில் ஸ்தானம் கிடைத்தது. தலைநகரின் சிறந்த பேச்சாளராக வெகு விரைவில் புகழ் பெற்றார்.

இவருக்குச் சபையோரைச் சிரிக்க வைக்கத்தான் தெரியும் என்று மக்கள் நினைத்து விடாதபடி அரிய காரியங்களையும் செய்யலானார். அவருடைய சிந்தனைகளுள் அடிமைத்தளையை நீக்குவது தான் முதலிடம் பெற்றிருந்தது. அந்தக் கட்சிக்கு ஆதரவாக இவர் வாக்களித்தார். அடிமை வாழ்வு மற்றப் பகுதிக்குப் பரவா வண்ணம் தடுத்தார். இவர் இரண்டாம் முறை காங்கிரஸ் கட்சியில் இருந்த போது கொலம்பியா ஜில்லாவில் அடிமைத்தனத்தை நீக்குவதற்கு மனு ஒன்றைச் சமர்ப்பித்தார். அந்த மனு தள்ளுபடி செய்யப் பட்டது. பதவிக் காலம் முடிந்த பின்னர் அவர் ஸ்பிரிங் பீல்டுக்குச் சென்று தனது சட்டத்தரணித் தொழிலை மேற்கொண்டார்.

இவர் மக்களின் கவனத்தைப் பெரிதும் கவர்ந்தவர். உயர்ந்த உருவம் விந்தையான போக்கு, தொழிலில் திறமை, மக்களிடம் எளிமையாகப் பழகும் தன்மை, புத்திக் கூர்மை இவையே இவருடைய சிறந்த அம்சங்கள். கறுப்புக் கோட்டுடனும், வழக்குக் கட்டுக்களுடனும் நாள்தோறும் நீதிமன்றத்திற்குச் செல்வார். அரசியல் கட்சியில் பெரிதும் ஈடுபாடு கொண்டார். அடிமைப் பிரச்சினை அவர் உள்ளத்தையே இடமாகக் கொண்டது.

இந்த நாடு பாதி அடிமையாகவும், பாதி சுதந்திரமாகவும் இருக்க முடியாது என்று ஒரு முறை கூறினார்.

சில ஆண்டுகள் கடந்தன. அமெரிக்காவின் வடபகுதிக்கும் தென் பகுதிக்கும் இடையே நாற்பது ஆண்டுகளாக இருந்து வந்த பகை வளர்ந்து முற்றியது. சச்சரவுகள் பலவாயினும் அடிமை விடயம் தான் முக்கியமானதாயிற்று. நாட்டின் தென் பகுதியில் விவசாயமே முக்கிய தொழிலாக இருந்தது. ஆகவேதான் பெரும் பணக்கார விவசாயிகள் பருத்தி சாகுபடிக்கு பல நீக்ரோ அடிமைகளை வேலைக்கு வைத்திருந்தனர். ஆகவே அவர்கள் வடபகுதியினரின் வாதத்தை எதிர்த்தார்கள்.


1858 ஆம் ஆண்டில் வடபகுதியினர் லிங்கனை அபேட்சகராக நியமித்தனர். தென்பகுதியினரின் அபேட்சகராகிய டக்லஸ் வலிமையுடையவர். எனவே அவரே வெற்றி பெற்றார். லிங்கன் தோல்வியுற்றார்.

இந்தத் தோல்வி லிங்கனுக்குப் பெரிய ஏமாற்றத்தைக் கொடுத்தது. ஆயினும் தனது நகைச்சுவையினால் அவர் அதைப் பொருட்படுத்த வில்லை. இந்தத் தோல்வி இவரையும், இவரது நண்பர்களையும் வெற்றி பெறத் துண்டியது. நியூயோர்க்கில் இவர் உற்சாகத்தோடும், ஊக்கத்தோடும் ஆற்றிய சொற்பொழிவு இவருக்கு மேலும் புகழை ஈட்டித் தந்தது. இந்த ஏழைச் சட்டத்தரணிக்கு எப்படி உயர்ந்த சக்தி வாய்ந்த புகழ் கிடைத்தது என மக்கள் கேட்கத் தொடங்கினர்.

1860 ஆம் ஆண்டு மே மாதத்தில் (வடபகுதி) குடியரசு தேசிய மகாநாடு சிக்காகோவில் கூடியது. ஆபிரகாம் லிங்கன் அந்த மாகாணத்தின் அபேட்சகராக நியமிக்கப்பட்டார். அந்த நியமனத்தை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டார். தேர்தல் வரை ஆபிரகாம் லிங்கன் ஸ்பிரிங்பீல்ட்டிலேயே தங்கியிருந்தார்.

வழக்கத்தை விட தேர்தல் மிகவும் பரபரப்பாய் இருந்தது. மக்களின் எண்ணங்களில் அடிமை நிலைதான் பெரிய கேள்விக் குறியாய் இருந்தது. டக்லஸ் அடிமை முறையை ஆதரித்தார். லிங்கன் தனது உறுதி மொழியில் அடிமை நிலை அமுலில் இருக்கும் பகுதி பாதுகாக்கப் பட வேண்டும் என்றும், ஆனால் அது சுதந்திர பகுதியில் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டாது என்றும் அறிவித்தார். கார்த்திகை மாதம் தேர்தல் நடைபெற்றது. அத்தேர்தலில் ஆபிரகாம் லிங்கன் ஐக்கிய நாடுகளின் தலைவராக (1861-1865) தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தொடரும்........



# வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும்



**ராமு** : அது பயங்கர சண்டைப் படம்தான். அதுக்காக இப்படிப் பண்ணக் கூடாது.

**சோமு**: ஏன்? என்ன பண்ணுறாங்க.

**ராமு**: டிக்கட் கொடுக்கும் போதே, முகத்தில் ஒரு குத்து கொடுக்கிறாங்க...

**தி.ரஜீவனி,** மட்டக்களப்பு.



**சுந்தர்** : அவர் திடீர் பணக்காரர் ஆன பிறகும் ஆள் மாறல்ல....

**கரன்** : பரவாயில்லையே..... உண்மையாகவா?

**சுந்தர்**: ஆமாம்! அவர் எனக்குத் தரவேண்டிய நூறு ரூபாவ இன்னும் தரவேயில்லையே...!

**கா.சந்திரன்,** திருகோணமலை.



**மனேஜர்** : இந்த ஆபிஸுக்கு நான் மனேஜரா? இல்ல நீ மனேஜரா?

**வேலையாள்** :நீங்க கோபம் கொள்ளுற அளவுக்கு நான் எந்த தப்பும் செய்யல்லையே சார்...

**மனேஜர்** : அதில்ல.. கொஞ்சநாளா எனக்கு ஞாபக மறதியா இருக்கு. அதுதான் கேட்டேன்.

**க.தபோதினி,** வவுனியா.



**கந்தசாமி** : என்னுடைய மனைவி ரீச்சர் என்று எப்படி கண்டுபிடிச்சீங்க?

**வேலு** : உள்ள வரும் போது வாசல்ல சோக்கால போட்டிருக்கிற கோலத்தைப் பார்த்துத்தான் கண்டுபிடித்தேன்!

**ம.சுஜிகா,** வாகரை.



**நோயாளி** : டாக்டர்! நீங்க என்னிடம் காசு வாங்காம மருந்து தார மாதிரி நேற்று கனவு கண்டேன்!

**டாக்டர்** : அதெல்லாம் ஒரு கெட்ட கனவா நினைத்து மறந்திடுங்க. இப்ப பணத்தைக் கட்டிட்டுப் போங்க.....

**ம.ஸ்ரெலா,** மன்னார்.



**நீதிபதி**: கடந்த மாதம் 22ந் திகதி வங்கியில் கொள்ளையடிக்க சுரங்கப் பாதை வெட்டினாயாமே! உண்மையா?

**திருடன்** : ஆமா! சுரங்கம் வெட்ட நல்ல நாளென்று கலண்டர்ல அந்த தேதிதான் போட்டிருந்தது. அதனாலதான் வெட்டினேன் ஐயா...

**வி.வினோஜன்,** வாழைச்சேனை.



**சரசு** : உங்க மாப்பிள்ளை கோபித்துக் கொண்டு போகிறார். கூப்பிடுங்களேன்!

**பார்வதி** : போகட்டும் விடுங்க. ஐந்து வருடங்களுக்கு முன்னாடி தீபாவளிக்கு வந்தவர். இப்பதான் போறார். போயிட்டு வரட்டும்!

**தெ.சயந்தன்,** பேசாலை.



**நோயாளி** : என்ன டாக்டர் ஒருகண்ண ஆப்பரேஷன் பண்ணச் சொன்னா, இரண்டு கண்ணையும் பண்ணிடீங்க....!

**டாக்டர்** : ஒரு கண்ணுக்குப் பண்ணினா.. மற்றக் கண்ணுக்கு இலவசமாச்சே...! அதுதான் பண்ணிட்டேன்!

**சா.உஷாந்தினி**




**அமைச்சர் 1** : நம் மன்னர் கண்ணாடியைப் பார்த்து ஏன் சிரிக்கிறார்?

**அமைச்சர் 2** : ஓ.... அதுவா...? கோழையின் சிரிப்பில் இறைவனைக் காண்கிறாராம்!

**க.கலைவாணன்.**



மனித உடலில் மிகவும் தூய்மையான இரத்தம் உள்ளது - **சிறுநீரகச் சிரை**



# வாசகர் கடிதம்




என் அன்பு நண்பன் விடியலே!

என் இதயம் கனிந்த நல் வாழ்த்துக்கள் உனக்கே! எம் சிறார்களின் மனம் மகிழ்ந்திடவும், வாழ்வு வளம் பெறவும் இரு மாதங்களுக்கு ஒரு முறை பலவேறுபட்ட தலைப்புக்களுடன் என் கரம் தவழ்ந்தாய். இறுதியாக வந்த பகிர்வு என்ற இதழில் பல அறிவுபூர்வமான விடயங்களை எம்முடன் பகிர்ந்து கொண்டாய். மன்னிப்பு என்னும் இதழில் பல புதிய விடயங்களையும், புதிய சிந்தனைகளையும், ஆக்கங்களையும் சுமந்து வந்து என் கரம் தவழ்வாய் எனக் காத்திருக்கிறேன்.

**S.ருசாந்,** சொறிக்கல்முனை.

பிரியமான தோழனே!

உன்னை நான் எப்படி வாழ்த்துவது? என் வளர்ச்சிக்கு நீயும் ஒரு காரணம். என் கல்விப் பாதையில் நீயும் கூட வருவதை எண்ணி மகிழ்கிறேன். நீ சுமந்து வந்த ஆக்கங்களைப் படித்து, பல விடயங்களை அறிந்து கொண்ட நான் எனது பாடசாலையில் நடைபெற்ற பொது அறிவுப்போட்டியில் கலந்து கொண்டு அதிக புள்ளிகளைப் பெற்றேன். அதற்கு காரணம் நீயே!

என் போன்ற மாணவர்களுக்கு என்றும் நீ வழிகாட்டியாக இருக்கவேண்டும். உன் பணி தொடர வாழ்த்துக்கள்.

**து.ரவிசங்கர்,** வாழைச்சேனை.

எம் மனம் கவர்ந்த விடியலே!

உனது பகிர்வால் நாம் அகமகிழ்கிறோம். அறிவில் வளர்ந்துள்ளோம். அன்பைப் பகிர்ந்திடவும், அறிவைப் பகிர்ந்திடவும் எம்மைத் தூண்டி விட்டாய். உன் விருப்பம் போல் நாம் வாழ்ந்திடுவோம். **பகிர்விலும், தியாகத்திலும்** சிறந்திடுவோம் என்ற புதிய **நம்பிக்கையை** எம் மனதில்க் கொண்டு சிறந்த மாணவர்களாகத் திகழ்ந்திடுவோம். என்றும் நீ எம்மோடு கூட வருவாயா?

**ந.மதிவதனி,** ஆயித்தியமலை.

அன்பு நண்பனே!

நீ சுமந்து வரும், அறிவிற்கு விருந்தாகும் நல்ல பல விடயங்களைக் கற்றுக் கொண்டேன். இன்னும் பல விடயங்களைக் கற்றுக் கொள்ள ஆசையாய், ஆர்வமாய்க் காத்திருக்கிறேன்.

**லூட்ஸ்மேரி,** பள்ளிமுனை.

எம் உள்ளத்தின் விடியலே!

இரு மாதங்களுக்கு ஒருமுறை மலர்ந்தாலும் நீ எம் மனதில் நிறைந்திருக்கின்றாய்! நீயே எம் நம்பிக்கை! நீயே எம் வழிகாட்டி! உன் வழி காட்டலும், பணியும் தொடர்ந்திட வாழ்த்துகிறேன்! **"மன்னிப்பு"** விடியலுக்காய் காத்திருக்கின்றேன்.

**த.வித்தியா,** சமயபுரம்.

விடியலே வணக்கம்!

எம் ஆக்கங்களைத் தாங்கி வரும் உனக்கு நாம் சொல்லும் நன்றிகள் பல. பகிர்வின் தனித்தன்மை என்னவென்பதை உணர்த்திவிட்டாய். **"தியாகம்"** என்ற விடியலில் எமது நண்பிக்கு முதலிடம் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சி அடைகிறோம். இந்த வெற்றிக்குக் காரணம் நீயே! நீ சுமந்துவருகின்ற எல்லா ஆக்கங்களையும் படித்து வருவதனால், எமக்கும் பல ஆக்கங்கள் எழுத முடிகிறது. நீ தொடர்ந்து எமக்கு ஊக்கம் தர வேண்டும் என்பதே எமது விருப்பம். உன் பணி சிறந்திட வாழ்த்துகிறோம்!

**மாலை நேர வகுப்பு மாணவர்கள்,** சாந்திபுரம்.

அன்பு விடியலே!

உம்மை நாம் புகழ்கின்றோம். வாசிக்க கஷ்டப்படுபவர்களுக்கும், சித்திரம் வரைய தெரியாதவர்களுக்கும் உனது ஆக்கமும், ஊக்கமும் பெரும் உதவி புரிந்தது. அது மட்டுமல்லாமல் பொது அறிவுக் கேள்விகளைத் தந்து எம்மை சிந்திக்க வைத்து விடைகாணச் செய்கிறாய். அதில் வெற்றி பெறும் எமக்கு பரிசு தந்து மகிழ்விக்கின்றாய். உன் அர்ப்பணிப்புக்கும், சேவைக்கும் உளம் கனிந்த வாழ்த்துக்கள்.

**மாலை நேர வகுப்பு மாணவர்கள்,** பேசாலை.

விடியலுக்கு வாழ்த்துக்கள்!

உன்னைப் படித்துச் சுவைக்கும் உள்ளங்களுள் நானும் ஒருவன். நானும் உன் நண்பனாக ஆவலாய் உள்ளேன். உன்னைப்படித்த நான் உண்மையாக நாம் இவ்வுலகில் எவ்வாறு வாழ வேண்டும் என்பதை நன்கு உணர்ந்து கொண்டேன். பல படிப்பினைகளை உன் மூலம் கற்ற நான் சிறந்த மாணவனாக வாழ்ந்து பிறருக்கு முன்மாதிரிகையாகத் திகழ்வேன். அதற்கு நீயும் எனக்கு உதவுவாய் என நம்புகிறேன். எனது ஆக்கங்களையும் நீ சேர்த்துக் கொள்வாயா?

**தெ.முகுந்தன்,** பாளையடித்தோணா.

# பாராட்டுக்கள்

CONGRATULATIONS!

(கவிதை, ஜோக்ஸ், கட்டுரை, கதை, விடுகதை, பொதுஅறிவு, கடிதம் எழுதியவர்கள்)

**பன்குடாவெளி :** உ.சோபனா, க.கஜேந்தினி, R.தர்மிகா, எ. சுரேகா.

**திருகோணமலை :** த.நிலுர்த்திகா, வி.குகேஸ்கா, பி.கனிஸ்கா, க.ராஜ்குமார், P.பரமேஸ்வரன், கோ.பிரிதா, ரெ.அஜித்குமார், ப.பரிமளம், ஜெ.லோரன்ஸ், ஜெ.பிரியதரன், ஜெ.கவிதரன், மு.வைஷ்ணவி, பி.கனிஸ்ரிகா.

**பள்ளிமுனை :** S.ரேணுகா, ஆ.லூட்ஸ் றோச், வி.ஜெரோசிக்கா, அ.அனற்ஜெஸ்மின், T.டிலுக்ஷனா, A.போர்ஜினி, வி.ஜெரோஷிகா, பெ.கெப்ரின்.

**மட்டக்களப்பு :** M.மிதுர்சன், த.கேதீஸ்வரன், த.ஜஸ்மிதா, V.தனுஜன், த.லக்சிதரன், பி.திவ்விஜா, M.ராஜேந்தினி, க.டினுசிக்கா, தே.பிரியன், தே.ரகுவரன், கு.விதுஜன், கு.நிஷாந்தினி, சி.றம்சிதா, க.அலந்தா, க.கமலா.

**வாழைச்சேனை :** நா.அனுஜா, கு.டனுசியா, கோ.சோபினி, க.விதுஜா.

**மூதூர் :** த.வினித்ரா, த.தர்சி, த.ஜென்சி, சு.சுமன், நிக்ஷன், சு.சுபாஜினி, கி.அமலேஸ்.

**பாலையடித்தோனா :** பொ.சுவேந்திரன், க.லோஜினி, இ.விஜேந்தினி, கோ.ரஞ்சித், கோ.சோபினி, சு.சுரேஸ்குமார், கோ.தினேந்திரன்.

**வவுனியா :** தஹானி, சப்ரா, பஸால், நிமாஸ், சப்ரீனா, சப்ரீன், சதீகா, டெ.மேரி கிறிஸ்ரீனா, வ.அனுஜா

**மகிழவட்டவான் :** சி.லதுஜன், அ.அனுசியா, செ.நிந்துஜா, த.டிசாந்தினி, க.விஸ்னுகாந்தன், சி.சுபாஸ்கர், தி.நிரோஷி.

**செல்வா நகர் :** பி.சசிகரன், T.சுசந்திகா, பு.தர்சிகா, க.கினோஜன்.

**ஆச்சிபுரம் :** கு.நிரோசன், ம.கருணாகரன்.

**வெருகல் :** து.சுயவதனி, றொ.தனுஸ்டன்.

**வாகரை :** S. லோகிதன், கா.தபித்தா, கா.லக்ஷிகா, ம.நிருபாஜினி. **பூநகர் :** த.தனுஸ்பிரியா.

**அரியாலை :** உ.சுபதா, ம.மரியறொசானி, உ.லுஸ்மினா.

**இளவாலை :** மே.சுதர்சன், இ.கஸ்ரோ, டா.மிதுர்சன், வி.ரஜினிகா.

**குச்சவெளி :** கி.கலாமதி, வினோதினி, வே.சுபா, க.ரதினி.

**கல்நாட்டினகுளம் :** எ.தாரணி, மு.மதுமிதா, இ.அனந்தியா.

**சொறிக்கல்முனை :** நி.கார்மேல் வேஜினி, அ.ஸ்ரீபன், த.சுகன்னியா, தெ.ஜெகன், ஐ.விவேகா.

**தலைமன்னார் :** C.கென்சியா கூஞ்ஞ, A.டிலினியா குரூஸ், ம.லிர்த்திகா, வ.ரக்ஷனா.

**யாழ்ப்பாணம் :** சௌ.திலீப்குமார், சௌ.சதீஸ்குமார், சி.நிரோசினி, வ.விதுஜா, க.கன்சியா, அ.நிஷாநந்தினி.

**தவசிகுளம் :** வே.லம்சிகா, சி.லோஜினி, க.சிவமதி, வ.வினோஜன், ம.கீர்த்தனா.

**செட்டிகுளம் :** கி.அருந்ததி, த.ரவிக்குமார், ஏ.மேனன், த.ரபேஸ்கரன்.

**பூந்தோட்டம் :** ப.பஸ்மியா, க.சஹான், மி.மதுரா, தி.ரேணுகா.

**கற்குளம் :** றெ.ஜெரோம், த.நிலாந்தினி, செ.சந்திரகாந்தன்.

**முருங்கன் :** ஜெ.விஜிகலா, டெ.றொபின்சன், சிசிலியா.

**ஆனைக் கோட்டை :** வி.சுதர்சினி, வே.சுபாஜினி, அ.அனோஜன், எ.அன்ரனிராஜ், ஜீ.சதுர்ஷன், த.தபோதினி.

**மன்னார் :** சு. ஜான்சி ஜெனிபர், அ.அனஸ்ரியா, எ.பிரவீனா.

**மட்டுவில் :** அ.அஜிதா, அ.லோகிதன், கி.மனோஜிதன்.

**"மன்னிப்பு" விடியலுக்கு ஆக்கங்களை எழுதி அனுப்பிய அனைவருக்கும் பாராட்டுக்கள். இம்முறை வெற்றிபெற்றோர் விபரம் வருமாறு :**

1ம் இடம் : **R. தேவநேசன்**
கல்லடிடச்பார், மட்டக்களப்பு.

2ம் இடம் : **R. ஹரேஷ்**
சகாயபுரம், மூதூர்.

3ம் இடம் : **கி. றினோஜா,**
யோசப்வாஸ் நகர், தோட்டவெளி.

உங்களுக்குரிய பரிசுகளை உங்கள் மாவட்டத்திலுள்ள JRS அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.




வாத்துக்கள் ஒரே சமயத்தில் இடும் முட்டைகளின் எண்ணிக்கை - 17

# சித்திரமும் கைப்பழக்கம்




**எஸ். ஜெறோமி**
பள்ளிமுனை



**மா. அருள்ஸ்ரீவன்**
சாவகச்சேரி



**என். லக்சிகா**
சொறிக்கல்முனை




**எஸ். றூபி**
மன்னார்



**ஜே. யோகிலா**
சாவற்கட்டு
மன்னார்




**எவ். பிலிலியன் பீரிஸ்**
தலைமன்னார்



**எஸ். உதயகுமார்**
தம்பனைக்குளம்



**செ. கே. பிரவீன்**
மன்னார்



**ச. சந்திரசுகி**
குச்சவெளி




**செ. சுகிர்தன்**
வவுனியா




**ஏ. கே. நிசாந்த பாலன்**
பள்ளிமுனை



**கி. வசந்தகுமாரி**
குச்சவெளி



**அ. சுவீற்றி**
தரம் 6



**ஏ. டிலினியா குரூஸ்**
தலைமன்னார்
கிராமம்




**இ. றஜீவன்**
சொறிக்கல்முனை



**செ. செபஸ்ரியன்**
சாவகச்சேரி




**பி. வெரோணிக்கா**
தோட்டவெளி



**பீ. மிதுஷன்**
மன்னார்



**உ. கிரிகரன்**
பன்குடாவெளி



**கோ. நிவேதிகா**
குச்சவெளி



**யோ. நிறோசன்**
JRS காணிக்கை அன்னை
மாலைநேர மையம்



கணனிப் பயிற்சி நிறைவு விழா நிகழ்வு - யாழ்ப்பாணம்.



குச்சவெளி தையல் பயிற்சி நிறைவு விழா நிகழ்வு - திருகோணமலை.



உற்பத்தி மையம் - வவுனியா.



அவசரகாலப் பணி - வவுனியா.



வாழ்வியல் பயிற்சி மாணவர்களுக்கான உளவியல் கருத்தமர்வு - மன்னார்.



வாழ்வியல் பயிற்சி நிறைவு விழா நிகழ்வு - மட்டக்களப்பு.

From :
JRS
**Jesuit Refugee Service**
**31, Clifford Place, Colombo 04.**
**Tel: 011 - 2504384**

To:

Transcent Printers (Pvt) Ltd. T/F : +94 11 2331404